# தொண்டன்

ஆரம்பம் : 1969 பெப்ரவரி





## 40 வது ஆண்டு நிறைவின் நிகழ்வுகள்






பெப்ரவரி 2009

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


பெப்ரவரி - 2009

மலர்- 41 இதழ்- 01

**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

வயலற் சந்திரசேகரம்

**கணினி வடிவமைப்பு**

நிரோன்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| தொண்டன் சஞ்சிகையின்... | - | 02 |
| திரு. மட் மறைமாவட்ட... | - | 05 |
| இவன்தான் மனிதன் | - | 06 |
| வரலாறு தரும்... | - | 08 |
| இலக்கிய மஞ்சரி | - | 11 |
| கடுகுக் கதை | - | 12 |
| உனக்குள் உன்னை... | - | 13 |
| தொண்டனும்... | - | 15 |
| தமிழில் சில சொற்கள் | - | 16 |
| வலிக்கும் இரணங்கள் | - | 20 |
| உங்கள் சுகமான வாழ்வுக்கு... | - | 24 |
| சிறப்பான வாழ்க்கை... | - | 25 |
| ஆண்டு ஒன்று... | - | 26 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE

P. O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

E.mail: scctribatti@gmail.com



விலை : *20/=*

ஆண்டு சந்தா : *350/=*

*(தபாற்செலவு உட்பட)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...

தொண்டனின் 40வது ஆண்டு நிறைவு விழா மட்டக்களப்பிலும் (17.01.2009) திருகோணமலையிலும் (31.01.2009) சிறப்பிக்கப்பட்டது என்பதை வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். **இவ்விழா சிறப்புற ஒத்துழைத்த அனைவருக்கும், அத்தோடு வருகை தந்திருந்தவர்கள், பத்திரிகை நிருபர்கள் மற்றும் கலைஞர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

இன்று சில பங்குகளிலும் வாராந்த, மாதாந்த, மற்றும் சிறப்பு சஞ்சிகைகள் வெளியிடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவை வரவேற்கத்தக்க விடயமே. தொண்டன் தன் பாராட்டுகளை இவர்களுக்கு தெரிவித்து நிற்கின்றான். **பத்திரிகை, சஞ்சிகை என்பவற்றை வெளிக்கொணர்வதிலுள்ள சிரமத்தை நாம் அறிவோம்.** அந்த வகையில் ஆக்கங்களைச் சேகரித்து, அச்சிட்டு அதனை விநியோகிக்கின்ற அனைத்து விடயங்களிலும் சகிப்புத் தன்மையோடும் விடாமுயற்சியோடும் பங்கெடுக்கின்றவர்களை மெச்சாமல் இருக்க முடியாது.

தொண்டன் ஒரு தனிப்பட்ட கத்தோலிக்க பத்திரிகையாக தொடக்க காலத்தில் வலம் வந்தது உண்மைதான். ஆனால், அவன் சமயத்தோடு மட்டும் நின்றுவிடாமல் சமூகப் பிரச்சினைகளை அலசுவதோடு விழிப்புணர்வினை ஊட்டும் வகையில் செயற்பட்டுக்கொண்டு கலை, கலாசார, பண்பாடு, இலக்கியம் என பன்முகப்படுத்தப்பட்ட ஆக்கங்களைத் தாங்கி தமிழ் பேசும் மக்கள் யாவரையும் உள்வாங்க மிகச் சீக்கிரமே முனைந்துவிட்டான் என்பது பெருமிதமே. இது கத்தோலிக்கத் திருமறையின் சிறப்பம்சமாகும். அதாவது **மத, இன, சாதி, மொழி பிரிவினைகள் யாவற்றையும் கடந்து கடவுளின் அன்பை வெளிப்படுத்துவது.** ஆகவே, தொண்டனும் இவ்வாறு அகலக் கால் விரித்திருப்பதும் அவனது வழி தனி வழி என்று சொல்லக்கூடிய தொண்டாகவே இருக்கிறது.

இவ்வாறு ஜனரஞ்சகமாக வெளிவரும் **தொண்டன் எமது திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத்தின் சஞ்சிகையாகும்** என்பதை குருக்கள், பங்குத்தந்தையர்கள், மறைமாவட்டத்தில் பணியாற்றும் துறவற சகோதர, சகோதரிகள், பொதுநிலைப் பணியாளர்கள் மறந்துவிடக் கூடாது.

**எனவே, அனைவரும் தொண்டனின் வளர்ச்சியில் பங்கெடுக்கவேண்டும். ஆக்கங்களை எழுதி அனுப்பவேண்டும், அதிக பிரதிகள் விற்பனை செய்ய ஊக்கப்படுத்தவேண்டும்.**

தமது பங்குகளில், நிறுவனங்களில், பாடசாலைகளில் வெளியீடுகளைச் செய்யலாம். இருந்தும் தொண்டன் மறைமாவட்ட சஞ்சிகை **40 ஆண்டுகளாக சகாய விலையில் தனது சேவையைச் செய்கின்றான்** என்பதைக் கருத்திற்கொண்டு தொண்டனை வாங்க, வாசிக்க, ஆக்கங்கள் எழுத, பயன்பெற பெரிதும் **உதவ வேண்டும் என்று தொண்டன் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றான்.**

**- ஆசிரியர்**



## இறைவாக்கு

"சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன்"

(மத்தேயு: 25:21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# "தொண்டன்" மாத சஞ்சிகையின் 40 ஆண்டுகள் நிறைவு விழா

**மட்டக்களப்பில்...** • அன்புமணி

ஒரு மாத சஞ்சிகை 40 ஆண்டுகள் தொடர்ந்து வெளிவருவது என்பது - அதுவும் மட்டக்களப்பிலிருந்து அப்படி வெளிவருவது என்பது ஒரு மகத்தான சாதனை. இச்சாதனையை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் 40 ஆண்டு நிறைவு விழா கடந்த 17.01.2009இல் இருதயபுரம் இருதயநாதர் ஆலய மண்டபத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்வைபவத்தில் முதன்மை அதிதியாக, மட் - திருமலை துணை ஆயர் கலாநிதி பொன்னையா யோசப் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக அருள்தந்தை சில்வெஸ்டர் ஸ்ரீதரன், முன்னாள் கலாசாரப் பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

வரவேற்பு, மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கை நிறுவக மாணவிகள் வழங்கிய வரவேற்பு நடனம் பார்வையாளர்களைப் பரவசப் படுத்தியது.

அதைத் தொடர்ந்து வரவேற்புரையை, இயக்குனர் அருள்தந்தை றொஹான் பேணாட் நிகழ்த்தினார். மிகச் சுருக்கமாக அழகு தமிழில் இவ்வுரை அமைந்தது.

வரவேற்புரையைத் தொடர்ந்து முதன்மை அதிதியின் உரை இடம்பெற்றது. இந்த உரை தொண்டனின் கடந்த 40 வருட வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டியது. கடந்த காலங்களில் 'தொண்டன்' ஆசிரியராகக் கடமை ஆற்றிய எஸ். அந்தோனிப்பிள்ளை (1969), அதி.வந். ஆயர் வ. தியோகுப்பிள்ளை (1970), அருள்தந்தை ஆர். எஸ். லோப்பு (1975), அருள்தந்தை அன்ரனிஜோன் அழகரசன் (1979), அருள்சகோதரர் எஸ். ஏ. ஐ. மத்தியு எப்.சி (1981), அருள்தந்தை ஏ. தேவதாசன் (1982), அருள்தந்தை சி. பி. இராஜேந்திரம் (1983) அருள்தந்தை பி. ஜோசப் (1988) அருள்தந்தை கிங்ஸ்லி றொபர்ட் (1989), அருள்தந்தை ஏ.தேவதாசன் (1994), அருள்தந்தை ஏ.ஜி.ஏ.ரட்ணகுமார் (2000), அருள்தந்தை றொஹான் பேணாட் (2006) ஆகியோர் பற்றி அவர் குறிப்பிட்டார். இதிலிருந்து அவர் 1988 காலப்பகுதியில் 'தொண்டன்' ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பதும் வெளிப்பட்டது.

அழகுதமிழில் அமைந்த ஆயரின் உரையைக் கேட்டு நாம் ஆச்சரியப்பட்டோம். அதற்கான காரணத்தை அவர் கூறினார். "தொண்டன்" ஆசிரியராக இருந்த காரணத்தினாலேயே தன் தமிழ் திருந்தியது என அவர் கூறியபோது நாம் மெய் சிலிர்த்தோம்.

அடுத்து சிறப்பு அதிதிகளில் ஒருவரான அருள்தந்தை சிறிதரன் சில்வெஸ்டர் அவர்களின் உரை இடம்பெற்றது. இவர், எகெட்-கரிட்டாஸ் முதலிய தொண்டு நிறுவனங்களின் பணிப்பாளர். அதனால், சமூக சேவையில் ஊறித் திளைத்தவர். நீண்டகாலம் தொண்டனோடு இணைந்திருந்தவர். ஆனாலும், மிக அடக்கமாக, மிகச் சுருக்கமாகத் தன் உரையை ஆற்றினார்.

மற்றொரு சிறப்பு அதிதியான எஸ்.எதிர்மன்னசிங்கம் கலாசாரப் பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தன் சேவைக்காலம் முழுவதும் தொண்டனோடு இணைந்திருந்த அனுபவத்தை அவர் கூறினார். ஆரம்பத்தில் சமய சஞ்சிகையாக இருந்த தொண்டன், படிப்படியாக மாற்றம் பெற்றுத் தற்போது ஒரு தரமான சமூக இலக்கிய சஞ்சிகையாக பரிணமித்திருப்பதை எடுத்துக்காட்டினார். அதற்குக் காரணமான இணை ஆசிரியர் "மலர்வேந்தனின்" பங்களிப்புப் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்து இடம்பெற்றது, திரு இருதய ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நடனக்குழுவினரின் நடனம். இதில் பங்குபற்றிய அனைவரும் சிறுமிகள். ஆனாலும், அனாயாசமாக நடனமாடி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி மாணவிகளுக்குத் தாம் எவ்வகையிலும் சளைத்தவர்களல்ல என்று நிரூபித்தனர். இந்நடனத்தைப் பயிற்றுவித்த ஆசிரியருக்கு நம் மனம் நிறைந்த பாராட்டுகள். இந்நடனம் பல இடங்களுக்கும் செல்லவேண்டும்.









அதைத் தொடர்ந்து அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்த "தொண்டன்" சிறப்பு மலர் வெளியீடு இடம்பெற்றது. ஒரு பொக்கிஷமாகப் போற்றிப் பாதுகாக்கவேண்டிய வகையில் இம்மலர் அமைந்திருந்தது. இணை ஆசிரியர் மலர்வேந்தனின் நீண்டகால அனுபவ முத்திரை இதில் பளிச்சிட்டது. "தொண்டன் வழி தனி வழி" என்ற தொண்டன் பற்றிய கட்டுரை (அன்புமணி) இவ்விழாவில் கௌரவம் பெறும் இரு இலக்கியப் பிரமுகர்கள் பற்றிய சுருக்கமான குறிப்பு; கடந்த காலங்களில் தொண்டன் ஆசிரியராகக் கடமை ஆற்றிய பன்னிருவரின் புகைப்படங்கள்; வெள்ளை மாளிகையில் கறுப்பு ஜனாதிபதி முதலிய பல விடயங்கள் மனதில் பதிகின்றன. அடுத்து விமர்சன உரை. இவ்வளவு சிறப்பான ஒரு மலரை தகுதியான ஒருவர் விமர்சனம் செய்யவேண்டுமென மனம் அங்கலாய்த்துக்கொண்டது. நல்லவேளை, மிகப் பொருத்தமான ஒருவரே விமர்சன உரையை நிகழ்த்தினார். மிகச் சிறப்பாகச் செய்தார்.

"தொண்டன் எனது பார்வையில்" என்ற அந்த உரையை நிகழ்த்தியவர் ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம் - ஆரம்பகாலம் முதல் தொண்டனுடன் மிக நெருக்கமாக உறவாடியவர். தொண்டன் குடும்பத்தில் ஒருவர். தொண்டனில் பல ஆக்கங்களை வழங்கியவர்.

எவ்வித சோர்வும் ஏற்படாமல் நிகழ்ச்சிகள் யாவும் விறுவிறுப்பாக நடந்தேறிக்கொண்டிருந்தன. ஆனாலும், அதற்குள் ஒரு விருந்து நடன விருந்து - மீண்டும் இசை நடனக் கல்லூரி மாணவிகளே நடன நிகழ்ச்சியை அளித்தனர் - அபாரம்.

அடுத்த முக்கிய நிகழ்வு - கலைஞர் கௌரவம். எல்லா வகையிலும் மிகத் தகுதியான இருவரை இக்கௌரவத்திற்காகத் தெரிவு செய்திருந்தனர். அவர்கள்:

- கவிஞர் வாகரைவாணன் - நாடறிந்த எழுத்தாளர், 'போது' ஆசிரியர், சென்னைப் பல்கலைக்கழக தமிழ் வித்துவான், ஐம்பது வருடங்களுக்கு மேலாக இலக்கியப்பணி ஆற்றி வரும் அபூர்வ மனிதர் - இலக்கிய நெஞ்சர்.

- அருள்சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியு எப்.சி - கார்மேல் பாத்திமா கல்லூரி முன்னாள் அதிபர், ஈடு இணையற்ற கல்விப் பணி புரிந்தவர், பல ஆய்வு நூல்களை எழுதியவர், பல்கலைக்கழகப் பட்டதாரி, பண்பின் உறைவிடம்.

நிகழ்ச்சி ஆரம்பத்தில் மேடையில் தனியான ஆசனம் ஒன்றில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருவரும் அமர்த்தப்பட்டனர். அவர்களைப் பற்றிய பாராட்டு உரைகளை முறையே திரு.எஸ்.பிரபாகரன், திரு.கே.ஞானரத்தினம் ஆகியோர் வழங்கினர். இவர்களுக்கு விருது, சான்றிதழ், பொற்கிழி, பொன்னாடை என்பன துணை ஆயர் கலாநிதி பொன்னையா யோசப் அவர்களால் வழங்கப்பட்டன. "தொண்டன்" குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.



கௌரவங்கள் இத்துடன் நின்றுவிடவில்லை "தொண்டன்" குழுவில் இணைந்து அதன் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்களுக்கும் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன. குறிப்பாக தொண்டன் இணை ஆசிரியரான மலர்வேந்தன் அவர்களும் பொன்னாடை போர்த்தி, மாலை சூட்டி, விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவரது பணிகளைப் பாராட்டி தொண்டன் குடும்பத்தைச் சேர்ந்த திரு பெஸ்லியோ வாஸ் அவர்கள் பாராட்டுரை வழங்கினார்.

தொண்டன் குடும்பத்தவர் மட்டுமல்லாது தொண்டன் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துவரும் எழுத்தாளர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.



மு.ப. 10.00 மணிக்கு ஆரம்பித்த இவ்விழா சரியாக 12.30க்கு நிறைவுற்றது. ஒரு அலட்டல் இல்லை. ஒரு பிசிறு இல்லை. ஒவ்வொரு நிகழ்வும் மனதை நிறைவடையச் செய்தது. ஒரு சிறு நெருடல் "தொண்டன்" வளர்ச்சியில் முழு நேரப் பங்களிப்புச் செய்துவரும் மலர்வேந்தன் எவ்வித உரையும் நிகழ்த்தவில்லை. அவர் ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டார். ஆனாலும் என்ன அவரைப் போன்ற குரல் வளம் கொண்ட ஹரிச்சந்திரா அறிவிப்புகளைச் செய்து நிகழ்ச்சிகளை மிக இதமாகத் தொகுத்து வழங்கினார்.

## திருகோணமலையில்...

• பாரதி



தொண்டன் 40வது ஆண்டு நிறைவு விழா திருகோணமலையிலும் நடைபெற்றது.

கடந்த ஜனவரி மாதம் 31ம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணியளவில் திருகோணமலை புனித மரியாள் பேராலய கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவுக்கு, முதன்மை அதிதியாக பேரருள்தந்தை பொன்னையா யோசப் அவர்கள் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக அருள்தந்தை F. X. டயஸ் (எகெட்), அருள்தந்தை சி. பி. இராஜேந்திரம் (யே.ச) கிழக்குப் பல்கலைக்கழகம் - ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



வரவேற்புரையைத் தொண்டன் ஆசிரியர் அருள்தந்தை றொஹான் பேணாட் வழங்க முதன்மை அதிதியின் உரை இடம்பெற்றது. ஆயர் தமது உரையில்: தொண்டன் உருவான வரலாற்றையும், தொண்டனோடு தமக்குள்ள உறவையும் எடுத்துக் கூறினார். தொண்டன் ஆசிரியராகவும் ஆயர் சில மாதங்கள் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி 23ம் பக்கம்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திரு/மட் மறைமாவட்ட ஆயரின் 2009ம் ஆண்டுக்கான மேய்ப்புப் பணி திட்டமிடல் சுற்றுமடலிலிருந்து...

இவ்வாண்டுக்கான ஏற்பாடுகள்

## தூய பவுல் சார்ந்த உருவாக்கம்



- மறைமாவட்ட ரீதியாக:

01. மறைமாவட்ட வெளியீடுகளில் பவுல் சார்பான தொடர் கட்டுரைகளைப் பிரசுரித்து ஆன்மீக விருத்திக்கு உதவுதல்.
02. பவுலின் ஒளியில் மறைமாவட்டப் போட்டிகளை ஒழுங்கு செய்தல்
03. கிறிஸ்தவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடல் முயற்சிகளில் திறந்த உள்ளத்துடன் ஈடுபடல்.

- மறைக்கோட்ட ரீதியாக:

01. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பவுல் சார்ந்த விவிலிய, இறையியல் தொடர் உருவாக்கல் பயிற்சியினை தொடர்ந்து முன்னெடுத்தல்.
02. சமூகத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி நவீன, பாரம்பரியக் கலை வடிவங்களூடாக, கலைவழி நற்செய்திச் சான்று பகிர்தலுக்கு உயிர் கொடுத்தல்.

- பங்குகள் ரீதியாக:

01. ஆலயத் திருவிழாக்களின் போது மறையுரைக் கருப்பொருளாக, பவுலின் இறையூட்டலைப் பயன்படுத்தல்.
02. அன்பிய ஒன்றுகூடல்களிலும், பகிர்வுகளிலும் பவுலின் இறைவார்த்தைப் பகுதிகள் பற்றிய தெளிவினைப் பெறல்.
03. திருமுக வாசக விளக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

## இறைவார்த்தைப் பணியாளர்கள் உருவாகிடவும் நற்செய்தி அறிவிப்புப் பணி பெருகிடவும்.

- மறைமாவட்ட ரீதியாக:

01. நாளாந்த இறைவார்த்தை வாசிப்பு, தியானம் போன்றவற்றை அதிகரித்தல்.
02. விவிலிய அறிவுக்கு விருந்தாகும் மாநாடுகளைக் கூட்டுதல்.

- மறைக்கோட்ட ரீதியாக:

01. இறைவார்த்தைப் பணியாளர் உருவாக்கத்தை ஊக்கப்படுத்தல்.
02. இறைவார்த்தை சம்மந்தப்பட்ட கருத்தரங்குகள், கண்காட்சிகள், தியானங்கள் போன்றவற்றை மேற்கொள்ள திட்டங்கள் தீட்டுதல்.
03. இறைவார்த்தை பொறிக்கபட்ட பதாதைகளை நிறுவுதல்.

- பங்குகள் ரீதியாக:


01. இறைவார்த்தையை இல்லங்களில் அரங்கேற்றல்.
02. இறைவார்த்தையை அன்பியங்களின் உயிர்நாடியாக்குதல்.
03. மறைக்கல்வியினை இறைவார்த்தை மயப்படுத்துதல்.
04. சிறப்பான விவிலியவார அனுஷ்டிப்பு.
05. பங்கின் அனைத்து நிகழ்வுகளிலும் இறைவார்த்தைப் பாவனையை அதிகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒரு மனிதன் மனதில் ஏராளமான கேள்விகள் எழுந்து வாட்டின. மனிதனைப் பற்றி எழுந்த கேள்விகளுக்கெல்லாம் விடை காண இறைவனிடம்தான் உரிய கேள்விகளைக் கேட்கவேண்டும் என்று அவனுக்குள் முடிவு பிறந்தது. அது சாத்தியமாக வேண்டுமே! அவன் கடுமையாக முயற்சித்தான். தான் இறைவனைக் காணவேண்டும், அவரிடம் கேள்விகள் கேட்டுத் தெளிவு பெறவேண்டும் என்று அல்லும் பகலும் இறைவனைத் தியானித்து வந்தான். தன் பக்தனின் மனக்குறையை உணர்ந்த இறைவன் அவனிடம் பேசத் தீர்மானித்தார்.

"நீ என்னிடம் என்ன கேட்க விரும்புகிறாய்?" இறைவன் அவனிடம் கேட்டார். கடவுளைக் கண்ட மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப்போன அந்த மனிதன் "நிறையக் கேட்கவேண்டும் போலிருக்கிறது. உங்களுக்கு நேரம் கிடைக்குமா?" இறைவன் சிரித்துக்கொண்டு சொன்னார்: "என் நேரம் முடிவில்லாதது. நீ கேட்க விரும்பியதைக் கேள்"



அவனுக்குள் துணிச்சல் பிறந்துவிட்டது. முதலாவது கேள்வியாக, "கடவுளே மனிதனை நீரே படைத்தீர். அவனைச் சுயாதீனமாகச் செயற்படவும் வைத்தீர். இருந்தும், இந்த மனிதனைப் பொறுத்த மட்டில் உங்களுக்கு ஆச்சரியம் தருவது எது?" என்று கேட்டான். கடவுள் பதில் சொன்னார்.

"எனக்கு எது ஆச்சரியம் தெரியுமா? அவன் சிறு பராயத்தைப் பற்றி விரைவிலேயே அலுத்துப் போய் விடுகிறான். தான் விரைவிலே பெரிய ஆளாகவேண்டும் என்று விரும்புகின்றான். பின்பு திரும்பவும் குழந்தைப் பருவம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விடுகின்றான்" அவனுக்குள் குழப்பம்! கடவுள் தெளிவுபடுத்துகின்றார். எந்தக் குழந் தையும் பெரியவர்கள் விளையாட்டைத்தானே விரும்புகின்றன. பெரியவர்களைத்தான் பின் பற்றுகின்றன. நான் அப்பாவைப்போல... அம்மாவைப் போல... என்று பிறரைப் போல பெரிய ஆளாக வரவேண்டும் என்றுதான் விரும்புகிறது. அதே உணர்வில் வளர்ந்து இன்னும் பெரியவனாக மற்றவர்களைப் பிரதி பண்ணி வாழ முற்படுகிறது. கடைசியில் ஒரு நிலையில், நான் குழந்தையாகவே இருந்திருக்கக் கூடாதா என்றல்லவா அவன் ஏங்குகின்றான். அவன் குழந்தையாக இருந்ததில்லையா? பிறகு ஏன்?

அது மட்டுமல்ல, உலகார்ந்த செல்வத்தைத் தேடிக்கொள்ள தன் சுகத்தை, உடலைக் கூடக் கவனிக்காமல் உழைக்கின்றான். பிறகு என்னவென்றால், நல்ல சுகத்தைத் தேடிக்கொள்ள சேர்த்துக்கொண்ட செல்வத்தையெல்லாம் செலவிடுகின்றான். அதனால் சமயங்களில் ஓட்டாண்டியாகவும் ஆகிவிடுகின்றான் பார். அது ஆச்சரியமான விடயம்தான். தனக்கு எது முக்கியம் என்பதை தெளிவுபடுத்திக்கொள்ளவா முடியவில்லை?

தன் எதிர்காலம் பற்றி மிகவும் முனைப்புடன் கவலைப்பட்டுக்கொள்கின்றான். இதனால் பல சமயங்களில் நிகழ்காலத்தில் வாழவேண்டியதைத் தப்பவிடுகின்றான். கடைசியாக நிகழ்காலமும் இல்லை. எதிர்காலமும் இல்லை என்கிற பரிதாப நிலைக்குள் சிக்கிக்கொள்கின்றான். ஆச்சரியமாக இல்லை?

"தாங்கள் ஏதோ சாகாவரம் பெற்றவர்கள் போன்று எதையோ பண்ணிக்கொண்டு வாழ்கின்றார்கள். கடைசியாகத் தம் செயல்களின் விளைவாலே செத்துப் போகின்றார்கள். அவர்களுக்கு மீட்சியும் இல்லை மாட்சியும் இல்லை என்றாகிப் போகிறது!"


அந்த மனிதன் இறைவன் சொன்னதைக் கேட்டு மௌனித்துப் போகின்றான். யதார்த்தம் அவனைச் சுடுகின்றது. கடவுள் அவன் கரங்களைப் பற்றித் தடவிக் கொடுத்தார். அவன் மெய் மறந்து போனான். அப்போது அவன் மனதில் இன்னுமொரு கேள்வி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"கடவுளே! ஒரு பெற்றார் என்ற வகையில் உங்கள் குழந்தைகள் - நீங்கள் உருவாக்கியவர்கள் வாழ்க்கையில் என்ன பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?"

"யாரையும் யாரும் அன்புசெய்யச் சொல்லி வற்புறுத்தி அன்பைத் தேடிக்கொள்ள முடியாது என்று கற்றுக்கொள்ளவேண்டியது முதன்மையான பாடம். அதேவேளை அன்புசெய்யப்படும்படியாக தம்மை அவர்கள் விட்டுக்கொடுக்க வேண்டும். உன்னை நீ அன்பு செய்வதற்காக விட்டுக் கொடுக்காமல் போனால் யார்தான் உன்னை அன்புசெய்ய முடியும்? மற்றவரோடு தம்மை ஒப்பிட்டு வாழ்வதில் பலன் ஏதுமில்லை என்பதைக் கற்றுக்கொள்ளட்டும். பணம் படைத்தவனிடம்தான் எல்லாம் இருக்கும் என்று எண்ணுதல் தவறு. ஆனாலும், அவனுக்குத் தேவைகள் குறைவு என்பதையும் ஏற்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல, நம்மை அன்பு செய்யும் உள்ளங்களைக் காயப்படுத்த ஒரு செக்கனோ ஒரு சொல்லோ ஒரு வார்த்தையோ ஒரு செயலோ போதும். ஆனால், காயப்பட்ட மனதை ஆற்றுப்படுத்த நீண்டகாலம் எடுக்கும் என்றும் தெரிந்துகொள்ள வேண்டும். நம்மை அன்பு செய்ய ஏராளமானோர் இருக்கின்றார்கள். ஆனாலும், அதில் பலருக்குத் தம் அன்பை எப்படி எடுத்துக் காட்டுவது என்றே தெரியாது. அத்தோடு, ஒரு விடயத்தை இரண்டு பேரால் இரண்டு கோணங்களில் பார்க்க முடியும் என்பதையும் மற்றவர்கள் தம்மை எப்போதும் மன்னித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்பதையும் எதிர்பார்ப்பது நியாயமற்றது. மன்னிக்கப்பட வேண்டுமானால் நாம் முதலில் மன்னிப்பது எப்படி என்று செய்து பார்க்கவேண்டும் என்பதையும் அவன் கற்றுக்கொள்ள வேண்டும்" என்ற கடவுள் கடைசியாக இன்னுமொன்றைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்றும் சொன்னார். அதாவது,




**"நான் என்றும் உங்களுக்காக இருக்கின்றேன்"**

**- ஆனந்தா ஏஜீ. இராஜேந்திரம் -**

| | | | |
|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 |
| 05 | 06 | 07 | 08 |
| 09 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

விடை அடுத்த இதழில்...




*1–16 வரையான எண்களைப் பயன்படுத்தி எந்தப் பக்கம் கூட்டினாலும் 34 வரும்படி 5 நிமிடங்களில் சதுரங்களுள் எண்களை இடுக.*

(5 நிமிடங்களுக்குக் கூடக் கூடாது)

● வயலற்

**எங்கே உங்கள் நுண்ணறிவுக்கு ஒரு சவால்!!!**

**5 நிமிடத்துக்குள் வெற்றியா? நீங்கள் சிறந்த நுண்மதியாளர்தான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வரலாறு தரும் மட்டக்களப்பு

மட்டக்களப்பு என்ற பிரதேசத்திற்கு "மட்டக்களப்பு" என்ற பெயரும் "மீன்பாடும் தேனாடாம்" என்ற சிறப்புப் பெயரும் மட்டக்களப்பு வாவியுள் தனித்துவம் வாய்ந்த தீவிற்குப் புளியந்தீவு என்ற பெயரும் வழங்கி வருகின்றன. இப்பெயர்களைப் பற்றிய ஆய்வுகளை ஆய்வாளர்கள் பல விதமாகக் கூறுகின்றனர். இப்படியான பேராய்வுகள்:

**1. மட்டக்களப்பு**

"இது மட்டும் மட்டடா இது மட்டக்களப்படா" என்று சிறுபடகில் வந்த சில மீனவர்கள் வாவியின் உயர்ந்த மணல் மேற்றிடலில் அப்படகு நின்றதைக் கண்டு அப்படகோட்டிகள் பாடிய பாடலால் 'மட்டக்களப்பு' என்று பெயர் பெற்றதாகக் கூறுவர். (காண்க F.X.C நடராசா - மட்டக்களப்பு மான்மியம்)

**2. புளியந்தீவு**

இப்பெயர் வரக்காரணம் "புலியன்" என்பவர் இத் தீவை ஆட்சி செய்த காரணத்தினால் புலியன் என்பது மருவி புளியந்தீவு என்று அழைக்கப்படுகின்றது. புளியந்தீவு என்றால் புளிய மரங்கள் அதிகம் நிறைந்த தீவு என்ற கருத்தாகும் என்பர். இக் கருத்துகளை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது.

3. "மீன்பாடும் தேனாடாம்" என்பது இப்பிரதேசத்திற்கு வழங்கும் ஒரு பெயராகும். இதற்கு மட்டக்களப்பு வாவியினுள் மீன்பாடுகின்றது என்ற கருத்தை முன்வைத்து கல்லடிப் பாலத்தை மையமாக வைத்து மீன்பாடும் குரலைக் கேட்க முனைந்தனர். மீன்கள் உலகெங்கிலும் உள்ள நீர்நிலைகளில் வாழ்கின்றன. மீன்கள் மட்டுமல்லாது ஏனைய நீர்வாழ் ஜீவராசிகளும் உள்ளன. எல்லா உயிரினங்களுக்கும் மகிழ்ச்சி தரும் வேளைகள் உண்டு. அவ்வேளைகளில் அவைகள் ஒலி எழுப்புகின்றன. ஆகவே மட்டக்களப்புப் பிரதேசத்திற்கு மீன்பாடும் தேன்நாடு என்று கூறுவதில் கருத்தாழம் இல்லை.

மேற்கூறிய கருத்துகளை, மரபு சார்ந்த மருவுப் பெயர்களை நீண்டகால வழக்கில் மாறுபட்டு ஒலித்து ஒரு சிலரால் அவற்றுக்கான விளக்கக் கருத்துகள் முன்வைக்கப்பட்டு மக்கள் மத்தியில் நிலவி வருகின்றன. சில வேளைகளில் அதுவே வரலாறாகவும் மாறிவிடுகின்றது.

வரலாற்றை வரலாற்று விஞ்ஞானக் கண் கொண்டு நுணுகி ஆராய்தல் வேண்டும். அருள் செல்வநாயகம் அவர்கள் எழுதிய "சீர்பாத குலம்" என்ற ஆய்வு நூலில் வாய்மொழிச் செல்வமாக வரன்முறையாக வந்த சில கருத்துகளை ஆதாரமாகக் கொண்டு கல்முனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீரமுனை, சேனைக்குடியிருப்பு, மண்டூர், துறைநீலாவணை, துறைவந்தியமேடு ஆகிய கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தென்னிந்தியச்



– அருட்திரு. கலாநிதி. எஸ்.ஏ.ஐ. மத்தியு –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சோழ மன்னர்களினுடைய காலத்தில் இங்கு குடியேறினர் என்பதை வலியுறுத்துகின்றார்.



இலங்கை வரலாற்றில் சோழர்களுடைய ஆட்சி பற்றிக் குறிப்பிடும் போது சோழப் பெருமன்னர் பாராந்தகச் சக்கரவர்த்தியின் மகனும் வரலாற்றில் ராஜ ராஜ சோழன் எனப் பெயர் பெற்ற அருள் மொழி வர்மர் காலத்தில் கைப்பற்றப்பட்ட பொழுதே இங்கு சோழ நாட்டுத் தமிழரின் பரம்பல் ஏற்பட்டது என்பது சிலரின் முடிவாகும்.

மாண்புமிகு செல்வி தங்கேஸ்வரி, பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் சில வருடங்களுக்கு முன்பு வெளியிட்ட "மாகோன்" என்ற ஆய்வு நூலில் சோழர்களின் வரலாற்றை இலங்கையின் முன்னைய நூற்றாண்டுகளுக்குக் கொண்டு செல்கின்றார். மாகோன் என்பவர் யாழ்ப்பாண இராட்சியத்தை ஆண்ட ஒரு சோழ மன்னர்.

வரலாற்று நூல்களில் மாகோன் என்பது சிதைந்து மாகன் என குறிப்பிடப்படுகின்றது. மாண்புமிகு செல்வி தங்கேஸ்வரி மிகச் சரியான பெயரை இந்நூலுக்கு இட்டிருக்கின்றார்கள். மாகோன் என்பது பெரிய அரசன் என தமிழில் பொருள்படும். மாகோன் என்பது குறுகி ஒலித்து அப்பெயரின் கருத்தையும், வரலாற்றையும் சிதைத்து விடுகின்றது.

எனினும் தென்னிந்திய ஆட்சியும் தென்னிந்தியத் தொடர்பும் கிறிஸ்து சகாப்தத்திலே ஏற்பட்டது என்பதற்கும், குடியிருப்புகள் அமைந்திருந்ததற்கும் சான்றுகள் பல இருக்கின்றன. (காண்க "கர்மயோகி பவுல் ஆய்வு நூல்" S.A.I மத்தியு - 1. இலங்கையிற் கிறிஸ்தவம், 2. இந்தியாவிற் கிறிஸ்தவம்)



தமிழ்ப் பெருங் காப்பியம் சிலப்பதிகாரம் "ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்" எனக் குறிப்பிடுகின்றது. இலங்கையின் வரலாற்றை எண்பிக்க விரும்பும் மகாவம்சம், சோழன் கரிகால் மன்னன் இலங்கைக்குப் படையெடுத்து 12000 பேரைக் கைதியாகக் கொண்டு சென்றமையும், பின் இலங்கை வேந்தன் இந்தியாவிற்குச் சென்று அக்கைதிகளை மீட்டதோடு மேலும் 12000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தமிழர்களை இங்கு சிறைபிடித்து வந்ததாகவும் அந்நூல் கூறுகின்றது. பன்னிரெண்டு என்று கூறுவது ஒரு சிறப்பு வழக்கு. மேற்கூறிய கருத்துகளில் கருத்தாழம் மிக்க வரலாற்று உண்மைகள் புதைந்து கிடக்கின்றன.

தென் இந்தியாவில் சோழர்களுக்கும் பாண்டியருக்கும் அடிக்கடி போர்கள் ஏற்பட்ட வரலாறு எமக்குத் தெரிந்ததே. அவ்வேளைகளில் பாண்டியர்கள் இலங்கை அரசர்கள் பக்கம் சார்ந்தனர். ஒரு பலம் கூடிய அரசுக்கு எதிராக பலம் குறைந்த அரசர்களை இலங்கை மன்னர்கள் ஆதரித்தமை வரலாறு. உதாரணமாக இலங்கை மன்னன் 5ம் மகிந்தன் காலத்தில் (9ம் நூற்றாண்டின் ஆரம்பம்) சோழர்களால் தோற்கடிக்கப்பட்ட பாண்டிய மன்னர் இலங்கை மன்னர்களிடம் சரணடைந்ததையும் அவன் மணிமுடியை இலங்கை மன்னன் காப்பாற்றியதையும் அறிகின்றோம். இத்தகைய செயற்பாடுகள் எத்தகைய சமூகத்தாக்கங்களுக்கு உள்ளாகி இருக்குமென்பதை நாம் சிந்தித்தல் அவசியம்.

தோல்வியுறும் மன்னர்களைச் சார்ந்த தென்னிந்தியத் தமிழ் மக்கள் அல்லது திராவிடர்கள் இலங்கையில் பல்வேறு குடியிருப்புகளை அமைத்திருப்பார்கள். அவர்களது பாரம்பரிய கலை கலாசாரங்களும் இங்கு பதிவாகி இருக்கும். அத்தகைய பதிவுகள் சமயம் சார்ந்தவைகளாகவும் இடப் பெயர்கள் சார்ந்ததாகவும் தம்முடிக்குரிய அரசர்களின் இலட்சினைகளைச் சார்ந்ததாகவும் அமைந்திருக்கும் என்பதில் எத்தகைய ஐயமுமில்லை.

கால ஓட்டத்தில் பெயர்கள் மருவி ஒலிப்பதையும், சுருக்கமாக ஒலிப்பதையும் நாம் காண்கின்றோம். உதாரணமாக தற்காலத்திலேயே ஞானரெத்தினம் என்ற பெயர் ஞானம் என சுருங்குவதையும் புவனேந்திரன் என்ற பெயர் புவனம் எனச் சுருங்குவதையும் தேவிகா என்ற பெயர் தேவி எனச் சுருக்கமாக அழைக்கப்படுவதையும் நாம் அறிகின்றோம்.

அரசியல் சூழ்நிலைகளில் கொந்தளிப்புகளால் தம் கட்சியைச் சார்ந்தவர்கள் யாவரென அறிந்து கொள்வதற்காக சில குறியீடுகளை பயன்படுத்துவதையும் அறிவோம். உதாரணமாக இயேசு பகவானின் மரணத்தை அடுத்து கிறிஸ்தவ மக்கள் அரசினால் துன்புறுத்தப்பட்டபோது அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள உபயோகித்த மறை பொருள் இலச்சினை மீன் ஆகும். இது வரலாற்றுத் தொன்மை.

இந்த வகையில் இலங்கையிலும் குறிப்பாக கிழக்கிலங்கையிலும் தமிழ்க்குடியிருப்புகளும் அவர்கள் சார்ந்த கலை கலாச்சாரங்களும் நிலவின.

– தொடரும் –




## மிகப் பெரிய நட்சத்திரம்

சூரியனைப்போல் ஆயிரம் மடங்கு பெரிய நட்சத்திரங்கள் கூட இருக்கின்றன. மிகச்சிறிய நட்சத்திரத்தின் விட்டமே 16கிலோமீற்றர் அளவு இருக்கும். அதனால்தான் நட்சத்திரங்கள் வெகு தூரத்திலிருந்தாலும் மொட்டை மாடியில் இருந்துகூட இரசிக்க முடிகிறது.
பிரபஞ்சத்திலுள்ள மிகப்பெரிய நட்சத்திரங்களில் ஒன்று betelgeuse. இது சூரியனைவிட முன்னூறுமடங்கு பெரியது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




சுதந்திரம் என்றதும் எம் நினைவுக்கு வருபவர்களில் மகாகவி சி. சுப்பிரமணியபாரதி அவர்களும் ஒருவர். அவர்களது சுதந்திரப் பாடல்கள் என்றும் உயிர்த் துடிப்பானவை. சுதந்திரப் பெருமை, சுதந்திரப் பயிர், சுதந்திரத் தாகம், சுதந்திர தேவியின் துதி, விடுதலை, சுதந்திரப் பள்ளு ஆகிய ஆறு பாடல்களை அவர் எழுதியுள்ளார். இவை பெரும்பாலும் தமிழ்த் திரையுலகப் பாடல்களாகவும் வெளிவந்துள்ளன. அவற்றை இலயித்து இரசிக்கும்போது மயிர்கள் சில்லிட்டுக்கொள்ளும்.


பாரதியார் இவற்றை அனுபவித்து எழுதியுள்ளார். இந்திய சுதந்திரப் போராட்டங்களில் அவர் ஈடுபட்டமையால் அவரால் உணர்ந்து பாடக்கூடியதாக இருந்திருக்கின்றது. இப்பாடல்கள் சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்ட, ஈடுபட்டு வருகின்ற எல்லாப் பிரிவினருக்கும் நாட்டவருக்கும் பொருந்தக்கூடியதாய் உள்ளன. சுதந்திர தாகம் எனும் பாடலினை எடுத்துக்கொண்டால்

*"என்று தணியுமிந்தச் சுதந்திரத்தாகம்?*
*என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்?*
*என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?*
*என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?*
*அன்றொரு பாரதமாக்க வந்தோனே,*
*ஆரியர் வாழ்வினை யாதரிப் போனே!*
*வென்றி தருந்துணை நின்னரு ளன்றோ?*
*மெய்யடி யோழினும் வாழுதல் நன்றோ?"*

பாரதியாரின் இதயத்தில் அடியில் இருந்து வெளிவந்த தாகப் பாடல் வரிகள் இவை. இப்பாடலின் மூலம் அவர் பல விடயங்களை வெளிக்கொண்டுவர விரும்புகின்றார். ***"என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்?"*** என்ற வரிகளை எடுத்துக்கொண்டால் உரிமை அறுக்கப்பட்டு அடிமையாய் இருப்பதனை மட்டுமல்ல வெளிநாட்டுப் பொருட்கள், நாகரீகங்கள், அவற்றின் மாயைகள் என்பனவற்றில் அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களிடமும் அவர் தட்டிக் கேட்டுப் பாடுகின்றார்.

அவர் அன்று பாடி வைத்தாலும் இன்றும்கூட இவ்வடிமை மோகம் எம்மை விட்டு அகலவேயில்லை. உலகமயமாக்கம், பூலோக மயமாதல் என்ற வடிவங்களில் அடிமை மோகம் தூவப்பட்டது தெரியாமலே விதைக்கபட்டுவிட்டது. அதிலிருந்து நாம் மீள்வது சற்றுக் கடினம்தான். உலகமயமாக்கலை விதைத்துவிட்ட, வல்லரசுகள் என்று தம்மைப் பீத்திக்கொள்ளும் நாடுகள் இன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற வேளையில் அவற்றின் பாதிப்பு எம்மையும் அல்லவா ஆட்டுவிக்கின்றது? பாரதி ஒரு தீர்க்கதரிசிதான்.....

பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை பாதுகாத்துக்கொள்ள, பல நாடுகளால் இன்றுகூட முடியவில்லை. பொருளாதாரத்திற்காக வேறு நாடுகளை நம்பியிருக்கவேண்டிய நிலை. சொந்த நாட்டுக்குள்ளேயே இனக்குழுக்களை, வர்க்கக் குழுக்களை அமுக்கி வைத்திருக்கும் நிலை என்றெல்லாம் காணப்படுகிறது ('சுதந்திரப் பயிர்' என்னும் கவிதையில்) இதனைத்தான் பாரதி அன்று சொன்னான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

*தண்ணீர்விட் டேவளர்த்தோம்? சர்வேசா!இப்பயிரைக்*
*கண்ணீராற் காத்தோம்; கருகத் திருவுளமோ?*

*எண்ணமெலா நெய்யாக எம்முயிரி னுள்வளர்ந்த*
*வண்ண விளக்கி∴து மடியத் திருவுளமோ?*

*ஓராயிர வருடமோய்ந்து கிடந்தபினர்*
*வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?*

*தர்மமே வெல்லுமெனுஞ் சான்றோர்சொற் பொய்யாமோ?*
*கர்ம விளைவுகள்யாங் கண்டதெல்லாம் போதாதோ?*

*மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்*
*நூலோர்கள் செக்கடியில் நோவதுவும்*
*காண்கிலையோ?*

இவ்வாறு அவரின் கவிதை வரிகள் செல்கின்றன. தொப்பிகள் (இவ்வரிகள்) எந்தெந்த தேசங்களுக்கு இன்று பொருந்துமோ அவை தம் தலையில் வைத்துக் கொள்ளட்டும்.

உண்மையிலேயே சாகாக் கவிஞன்தான் எங்கள் சி. சுப்பிரமணிய பாரதி.

# கடுகுக் கதை 12 சுதந்திரம்

ஆபிரிக்கக் கண்டத்தின் ஒரு மூலையில் அச்சிறிய நாடு அமைந்துள்ளது. அதன் ஒரு நகரத்தின் பெரிய மைதானம் ஒன்றின் அருகில் பிரமாண்டமான மரம் ஒன்று காணப்பட்டது. அதன் உச்சியில் கூடொன்றினுள்ளே தாயும் சேயுமாக இரண்டு பறவைகள். மைதானத்திலே "பாண்ட் வாத்திய" முழக்கங்களும், அணிவகுப்புகளுமாக ஒரே கோலகலக் கொண்டாட்டம். குஞ்சு, தாயிடம் கேட்டது

"என்னம்மா சத்தம்?"

"அது! சுதந்திர தினம் கொண்டாடுறாங்க"

"சுதந்திரம் என்றால் என்னம்மா...?"

தாய்க்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

"சரி! என்னோட வா..." என்றவாறு குஞ்சையும் கூட்டிக்கொண்டு சுமார் ஐம்பது கிலோமீற்றர் பறந்தது. கீழே பஸ்ஸொன்று புழுதி பறக்கச் சென்றுகொண்டிருந்தது.

"சரி அந்த பஸ்ஸுக்கு மேலாக முப்பது நிமிடம் பறந்து போயிற்று வா..." என்றது தாய். ஒரு மணித்தியாலம் கடந்து குஞ்சு திரும்பி வந்தது.

"என்ன நடந்தது...?" - தாய் கேட்டது

"பஸ்ஸ ஐந்து இடத்தில மறிச்சு சோதனை போட்டாங்க. ஒரு இடத்தில அதிலிருந்த



இரண்டுபேர கண்ணக் கட்டி கூட்டித்துப் போனாங்க" - குஞ்சு

"உன்னை யாரும் சோதிச்சார்களா...?"

"இல்ல.. ஒரு இடத்தில மட்டும் மின்கம்பிய முட்டப் பாத்தன்"

"இப்ப சுதந்திரம் என்டா என்னெண்டு உனக்கு விளங்குதா...?"

குஞ்சு யோசித்தவாறு சொன்னது

"கொஞ்சம் விளங்குது"

– பர்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உனக்குள் ஒரு திறமை

அந்தத் தினச் சந்தையில் ஒரே பரபரப்பு. அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு வயோதிபர் இறந்துவிட்டார். அவர் அந்தச் சந்தையில் யாருமற்ற ஓர் அனாதைச் சிறுவனாக வந்தவர்தான். சந்தைக்குப் போவோர் வருவோரிடம் பிச்சை எடுத்து தனது சீவியத்தை ஓட்டி வந்தவர். அங்குள்ள வர்த்தகர்களுக்கும் தன்னாலான சிறுசிறு உதவிகளை அவ்வப்போது செய்து வந்துள்ளார். எனவே அச்சந்தையின் வர்த்தகர்கள் ஒன்றுசேர்ந்து பிரேத அடக்கம் செய்தது மட்டுமல்ல அவர் தினமும் யாசகம் கேட்டு இருந்த இடத்தில் அவரது உருவச் சிலையை நிர்மாணிக்கத் தீர்மானித்தனர். வேலையைக் கொத்தர்களிடம் பாரம் கொடுத்ததைத் தொடர்ந்து கொத்தர்கள் அந்த அனாதை இருந்த இடத்தைத் தோண்டினார்கள். "டாங்" என்ற சத்தம் ஒலித்தது. அவதானமாகக் கவனித்தபோது அங்கே ஒரு பெரிய சருவக் குடம் நிறைய தங்க நாணயங்கள், அனைவரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தார்கள். "தனக்குள் இலட்சக்கணக்கான செல்வத்தை வைத்துக்கொண்டு தினம் தினம் இந்த ஆள் பிச்சை எடுத்துத்தானே சீவித்திருக்கிறான்" என்றார்கள்.

ஆம்... அவன் விட்ட பிழை ஆராயவில்லை, தேடவில்லை, தனக்குள் இவ்வளவு பொக்கிஷம் இருந்தது என்பது அவன் சாகும் வரை அவனுக்குத் தெரியாது. இதே போன்று உங்களுக்குள்ளும் எத்தனையோ அபார சக்திகள் புதைந்து கிடக்கலாம். அவற்றைத் தினம் தினம் தேடுங்கள், ஆராயுங்கள், வெளிக் கொண்டு வாருங்கள். அப்போது நீங்கள்தான் சாதனையாளர்கள். உனக்குள்ளேயே "நீ" இருக்கிறாய். உன்னை நீ வெளியே கொண்டு வா. உனது முன்னேற்றத்தின் எதிரிகள் - சோம்பல், அலட்சியம், வெட்கம், தாழ்வு மனப்பான்மை, எல்லாம் தெரியும் என்ற போலி வேடம். இவற்றைக் களைந்து விட்டு சுறுசுறுப்பாக இயங்கினால் வெற்றி நிச்சயமே.

"நீ" பல்வேறு திறமைகளின் தொகுப்பு. எனவே உனக்குள் உன்னைத் தேடிக் கண்டுபிடி. சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று சாடாதே. நீயே சந்தர்ப்பங்களை உருவாக்கி சாதித்துக் காட்டு. எவருமே திறமைகளுடன் பிறப்பதில்லை. ஓர் ஆலை விதை பெரிய மரமாவதுபோல் அது உனக்குள்ளிருந்துகொண்டே வளர்கிறது. உளவியலாளர் ஆபிரகாம் மஸ்லோ (Abraham Maslow)வின் கருத்துப்படி "ஒவ்வொரு மனிதனும் தன்னிறைவு பெறுவதையே இயல்பாகக் கொண்டவன். தனது அடிப்படைத் தேவைகளைப் படிப்படியாகப் பூர்த்தி செய்துவிட்டு, திறமைகள், ஆற்றல்கள், சாதனைகளில்தான் அவனுக்கு மனநிறைவு (Satisfaction) ஏற்படும்" என்கிறார்.


மனிதன் எப்போதும் மகிழ்ச்சியையே விரும்புவான். அவனுக்கென்று தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் உண்டு. இவை சிதைக்கப்படும்போது, நசுக்கப்படும்போது, நொறுக்கப்படும்போது, பிழையான வழிகாட்டலின்போது ஒருவனது சந்தோசம் தவிடு பொடியாகி விரக்தி ஆட்சி செய்யத் தொடங்குகிறது. சமூகக் கட்டுப்பாடுகள், அச்சுறுத்தல்கள், போர்ச் சூழல்கள் அவனை அடிக்கடி அச்சுறுத்தி மிரட்டத் தவறுவதில்லை.

அனேகமான பெற்றோர் தமது விருப்பு வெறுப்புகளை பிள்ளைகளுக்குத் திணிக்கறார்கள். கலையில் ஆர்வமுள்ள பிள்ளையை பொறியியலாளராக்க முயன்று, முயற் கொம்பு தேடுகிறார்கள். பணமும் வீண் விரயம், பிள்ளையின் சந்தோசமும் நாசம், பிள்ளையின் நிம்மதியும் நாசம். விஞ்ஞானத்தில் மூன்று "F" எடுப்பதைவிட கலைப் பட்டதாரியாகவாவது வரலாம் அல்லவா? பிள்ளைகளை தன்னம்பிக்கை அற்றவர்களாக மாற்றிவிடுகிறார்கள். ஆமை ஆயிரம் முட்டைகளை இடும் திறன் கொண்டது. அதற்காக முயலும் ஆயிரம் முட்டையிட முடியுமா? ஆனாலும் ஆமையவை விட அதி வேகமாக ஓடும் திறன் முயலுக்குண்டு. எனவே, ஒருவரது சரியான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




திறனை சரியான அளவில் இனங்காண வேண்டும். எத்துறையிலும் எடுத்தவுடன் வெற்றி வந்துவிடாது; தொடர்ந்தும் வெற்றி வந்துவிடாது. எனவே விடா முயற்சி இங்கு முக்கியம், மனவுறுதியும் முக்கியம், "முடியும்" என்ற நம்பிக்கையும் முக்கியம். எனவே, சோக்கிரடீஸ் கூறியது போல "உன்னையே நீ அறிவாய்". உன்னை நீ அறியாதவரை எதையும் சாதிக்க முடியாது. உனது பெறுமதியை நீ முதலில் புடமிட்டுக் கொள்.



ஒரு கருத்தரங்கிலே ஒரு பிரபல்யப் பேச்சாளர் 500 ரூபா தாளை எடுத்து, தூக்கிக் காட்டி "இந்தக் காசு யாருக்கு வேண்டும்?" என்றாராம். அவையோர் அனைவரும் 'எனக்கு வேண்டும் எனக்கு வேண்டும்' என்று கரங்களை உயர்த்தினார்கள். பின்பு 500 ரூபாவை நன்கு கசக்கிவிட்டுக் கேட்டார். "இது யாருக்கு வேண்டும்?" அனைவருமே மீண்டும் 'எனக்கு எனக்கு' என்று கத்தினார்கள். மீண்டும் 500 ரூபாவை தனது சப்பாத்துகளால் மிதித்து உளக்கி விட்டு துப்பினாராம். மீண்டும் அதை எடுத்து உயர்த்தி "இது யாருக்கு வேண்டும்" அனைவரும் 'எனக்கு எனக்கு' என ஓலமிட்டனர்.

இப்போது பேச்சாளர் பேசினார்: "நான் இந்த 500 ரூபா நோட்டுக்கு எத்தனை ஆக்கினைகள் செய்தபோதும் அதை நீங்கள் பெறுவதற்குப் போட்டி போட்டீர்கள். ஏன் தெரியுமா? நான் செய்த அநியாயங்களால் அதன் பெறுமதி கடுகளவாயினும் குறையவில்லை. அதுபோன்று உங்கள் சாதனைப் பயணத்தில் நீங்கள் நெருக்கப்படலாம், கசக்கப்படலாம், விரட்டப்படலாம், கீழே போட்டு மிதிக்கவும் படலாம் அல்லது அழுக்கில் தோய்க்கப் படலாம். ஆனாலும், நீங்கள் பெறுமதி மிக்கவர்களே. நேற்றைய ஏமாற்றங்கள் நாளைய இலட்சியங்களை விழுங்கிவிடக் கூடாது. நீங்கள் ஒவ்வொரு வகையிலும் விசேடமானவர்கள், தனித்துவமானவர்கள், மேன்மையானவர்கள். கண்ணதாசன் பாடினார் "உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம். வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காது நீ வாழலாம்" எனவே, உங்களை நீங்களே அற்பமாக எடை போட்டு அழித்துவிடாதீர்கள். மாறாக அற்புதமான திறன் கொண்ட உங்களை நீங்களே வெளியில் கொண்டுவந்து வெற்றி பெறுங்கள். உங்களிடம் உள்ள பொறுமை கூட பெரிய பொக்கிஷம்தான்.


- வயலற் சந்திரசேகரம் -

## காட்சியும் கவிதையும்



இந்தப் படத்தைப் பார்க்கும்போது உங்கள் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை இருவரிக் கவிதையாக எழுதி அனுப்புங்கள். தெரிவு செய்யப்படும் கவிதைகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

[ஆ-ர்]



## குறும்(புப்)பா - 13

வன்னியிலே கேட்குதம்மா ஓலம்
வதைபட்டு நிற்கும்பஞ்ச சீலம்
தோய்ந்துடல் செங்குருதி தொகையின்றிச் சாய்ந்தாலும்
வாய்மூடி நிற்குதையோ ஞாலம்

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டனும் ஆன்மீகமும்

சுமார் நாற்பது வருடங்களின் முன், அதாவது 1969ம் ஆண்டு மாசி மாதம் கத்தோலிக்கத் திருச்சபைக்கு மட்டும் உரிய சஞ்சிகையாக தொண்டன் மலர்ந்தது. ஆரம்ப கால மலர்வு அனைவரின் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும் மலராக இருந்தது என்பது உண்மை. ஆயினும் கால ஓட்டத்தில் இதன் சிறிய தளர்ச்சி பத்திரிகையின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமைந்தது.

உதாரணம் ஒன்று கூறப்போனால் 2002ம் ஆண்டு மாசி மாதம் வெளியான தொண்டனில் ஓர் ஆக்கம் 'மனதிலொரு மீளாய்வு' என்ற தலைப்பில் வெளியானது. இது வெறுமனே மனம் சம்மந்தப்பட்டதாக நாம் நினைத்தால் அது தவறு. அந்தப்பக்கத்தைப் புரட்டிப்பார்த்தால் எமது ஆன்மீகத்தை எவ்விதமாக அந்தப் பகுதி இழுக்கின்றது என்பது புரியும். பொதுவாக கிறிஸ் தவ சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள் எல் லாமே ஆன்மீகத்தை வளர்ப்பனவாகவே உள் ளன. அந்தவகையில் தொண்டனும் செயற்ப டுகின்றது என்பது உண்மையே.

ஆயினும் தொண்டனின் தொண்டு ஓயவில்லை; இதன் ஆன்மீகமும் அழியவில்லை.

இறை மக்களின் ஆன்மீகம் கட்டப்படும் கட்டடமாக தொண்டன் விளங்கியது உண்மை. இன்று நவீன தொழில் நுட்ப வசதிகள், நவீன கண்டுபிடிப்புகள், அதியுயர் தொடர்பு சாதனங்கள் உருவாகியுள்ள போதிலும் மக்களின் ஆன்மீகக் கதவை தட்டும் கரமாக தொண்டன் விளங்குகிறது என்பது உண்மை.

'சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்' அவ்வாறானால் வாசகர்கள் நாம் கை கொடுத்தால் தானே தொண்டனின் வளர்ச்சி உயர்வடையும். தொண்டுகள் வழங்க தொண்டன் தயாராக உள்ள போது நாம் எதற்காக நம் ஆன்மீகத்தை அழிக்க வேண்டும்.

தொண்டனில் வெளிவரும் போட்டி, பேட்டி மட்டுமல்ல அதற்குள் ஒளிந்துள்ள அனைத்துமே எம் ஆன்மீகத்துக்கு மருந்தாகின்றது. கூடவே விருந்தும் அளிக்கின்றது.

2004ம் ஆண்டு மாசி, பங்குனி, சித்திரை என மூன்று மாத இதழாக தொண்டன் வெளியானது. இதில் வெளியான ஒரு தகவல் 'முன்னேற்றத்துக்கு இருபது முட்டுக்கட்டைகள்' என்ற தலைப்புடன் 14ம் பக்கத்தில் வெளிவந்தது. அந்த முட்டுக்கட்டைகள் எம் வாழ்வில் நிச்சயம் இருக்கின்ற தடைக் கற்களே. இந்தத் தடைக்கற்கள் நீங்கினால் இறையுறவுக்குள் நாம் நுழையலாம்; ஆன்மீகத்தை வளர்க் கலாம்.

எனவே ஆன்மீகத்தை வளர்ப் போம் அதை மதிப்போம் இதற்காக தொண்டனை நாம் பயன்படுத்துவோம்.



க. கியூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சொற்கள் பொருள் பொதிந்தவை. ஒவ்வொரு சொல்லும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருளை உடையது. இச்சொற்கள் ஒரு மொழியின் வளர்ச்சியில் வகிக்கும் பங்கு மிக முக்கியமானது. ஒன்பது இலட்சத்திற்கும் அதிகமான சொற்களைக் கொண்டுள்ள ஆங்கில மொழி இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

தமிழைப் பக்தியின் மொழி என்று தனிநாயகம் அடிகளார் குறிப்பிட்டமைக்கு அதில் உள்ள பக்திப் பாடல்கள் மட்டுமின்றி அவற்றில் நிறைந்திருக்கும் சொல் வளமும் ஒரு முக்கிய காரணம் என்பது இங்கு நினைவு கூரப்பட வேண்டியதொன்று.

தனித்துவமும் சீரிய இலக்கிய வளமும் பெற்ற தமிழ் மொழியில் வடமொழிச் சொற்கள் சில வந்து சேர்ந்தமையை அக்காலப் பகுதியல் (கி.மு 3ம் நூற்றாண்டு) எழுந்த தொல்காப்பியமே எடுத்துக்காட்டும்.




இதுபோன்றே செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும் பேசப்பட்ட மொழிகளின் சில சொற்களும், தமிழருக்கும் கிரேக்கர், உரோமர் என்னும் யவனருக்குமிடையே நிலவிய உறவின் அடையாளமாகத் திகழும் அம்மக்களின் ஒரு சில சொற்களும் திசைச் சொற்கள் என்னும் பெயரில் தமிழ்த் தாயால் சங்க காலத்திலேயே (கி.மு 500- கி.பி 200) தத்தெடுக்கப்பட்டமைக்கும் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களுமே சரியான சான்றுகள்.

இதன் ஒரு தொடர்ச்சியாகப் பிற்காலத்தில் அராபியர் (முஸ்லிம்கள்), ஆந்திரர் (தெலுங்கர்), மராட்டியர், ஆங்கிலேயர் ஆகிய அந்நிய இனத்தவர்களின் அரசியல் ஆதிக்கத்தின் கீழ் தமிழ்நாடு முடங்கியிருந்த காலப்பகுதியில் (கி.பி 12ம் நூற்றாண்டுக்குப் பின்பு) அவ்வந்நியரின் தாய் மொழிச் சொற்கள் சிலவும் தமிழோடு ஐக்கியமாகின.

இவ்வரலாற்றின் இன்னுமொரு பரிணாமமாக இன்று புதிய சொற்கள் பல கலைச் சொற்கள் என்னும் பெயரில் தமிழில் தலைகாட்டுவதைப் பார்க்கின்றோம். இவற்றின் தோற்றம் காலத்தின் தேவையைக் காட்டுவதோடு இன்றைய விஞ்ஞான யுகத்தில் ஆங்கில மொழிக்கிருக்கும் அளவற்ற செல்வாக்கையும் அது சுட்டி நிற்கிறது.

இச்சிறு கட்டுரை தமிழில் உருவாகியிருக்கும் புதிய சொற்கள் (கலைச் சொற்கள்) சிலவற்றோடு தன்னிலை திரிந்து தமிழோடு கலந்துவிட்ட பிறமொழிச் சொற்கள் சிலவற்றையும் தனது ஆய்வுக்குட்படுத்த முனைகிறது.

தமிழ் இலக்கியகாரர்களால் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொற்களில் நவீனம் என்பதும் ஒன்று. மகாகவி பாரதியும் நவகவிதை என்று பிரகடனம் செய்வதைக் காண்கின்றோம். புதிது என்னும் பொருள் கொண்ட இச்சொல் (நவீனம்) நவ என்னும் வடமொழிச் சொல்லின் அடியாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அருள் வெள்ளம்

பாழடைந்த கட்டிடம் போல்
பாறிவீழ்ந்த ஆல் போல்
பழுதடைந்த நாறியபுண் போல்
பாவப்பட்டது என்மனம்
இறையே!
உன்னை மறந்த
பரதேசி என்னைக் கண்நோக்கு

வாய்நிறையப் பொய்
வளம் கொழிக்கும் வாழ்வு
பிறர் துன்பத்தில் சிரிப்பு
கள்ளம் கொண்ட உள்ளம்
இத்தனையும்
கடற்கரை மணல் போல்
என்னில்...
இறையே!
நான் மானிடன் அல்ல;
மனிதப் பிறவியும் அல்ல
மிருகக் குணம்
மிஞ்சியே இருக்கிறது
என்னில்...
இறையே!
பள்ளம் நாடிச் செல்லும்
வெள்ளம் போல் - என்
உள்ளம் நாடி வரட்டும்
உந்தன் அருள் வெள்ளம்

**- யாழ். ராதவல்லி -**

பிறந்தது. ஆயினும் வடமொழியின் இன்னுமொரு சகோதர மொழியான இலத்தீன் மொழியில் நவ என்னும் சொல் NOVUS என அதே பொருளில் குறிக்கப்படுவதும் நமது அவதானத்திற்குரியது.

தமிழில் தோற்றம் பெற்ற நவீன இலக்கியங்களில் நாவல் என்பதும் ஒன்று. புதினம், தொடர்கதை என்றெல்லாம் சொல்லப்படும் நாவல் என்னும் சொல் NOVEL என்னும் ஆங்கிலச் சொல்லின் திரிபேயாயினும் இச்சொல் NOVELLUS எனும் இலத்தீன் சொல்லிலிருந்தே பிறந்ததாகும். இதற்கும் புதியது (புதுமை அல்ல) என்ற பொருள்.

போர்த்துக்கீசரின் வருகையோடு, கத்தோலிக்க மதம் மட்டுமின்றி அவர்களின் சொற்கள் சிலவும் நம்மோடு வந்து சேர்ந்துகொண்டன. அச்சொற்களில் இன்று பெரும் பிரபல்யம் பெற்று விளங்கும் பாண் என்பதும் ஒன்று. இச்சொல் பண் எனும் சொல்லிலிருந்து பிறந்ததெனச் சிலர் வலிந்து பொருள் கொள்ளினும் PANIS எனும் சொல்லையே அது மூலமாகக் கொண்டது என்பதே சரியான ஆய்வினிறுதி முடிவாகும்.

நாவாய் என்பது ஒரு பழந்தமிழ்ச் சொல் சங்க இலக்கியங்களே இதற்குச் சான்று. ஆயினும், இச்சொல்லின் இயல்பையும், பொருளையும் கொண்ட NAVIS என்னும் இலத்தீன் சொல்லைக் காண்கின்றபோது நமக்குச் சற்று வியப்பு ஏற்படுகின்றது. அதே நேரம் இவ்விரண்டு சொற்களில் எது, மற்றதன் மூலம்? என்ற கேள்வியும் நமது ஆய்வுணர்வைக் குடையவே செய்கிறது. இந்தக் கேள்விக்கான பதில் எப்படியிருப்பினும் உரோமருக்கும் தமிழருக்குமிடையே ஒரு காலம் (கி.மு 10ம் நூற்றாண்டு) நிலவிய உறவின் ஓர் அடையாளமாகவே இச்சொல் (நாவாய்) இன்று விளங்குகிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மேலும், யாழ்ப்பாணக் குடா நாட்டின் கரையோரக் கிராமங்களில் ஒன்றான நாவாந்துறை அதன் ஆரம்பகாலத்தில் நாவாய் துறையாகவே இருந்திருக்க வேண்டும் என்னும் வரலாற்றுண்மையையும் இச்சொல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இது போன்றே, மட்டக்களப்புத் தமிழகத்தின் கிராமங்களில் ஒன்றான நாவிகன்வெளி என்னும் ஊர்ப் பெயரும் நாவாய் என்னும் சொல்லோடு தொடர்புடையதாகும். உண்மையில் இச்சொல்லின் (நாவிகன்வெளி) முதல் பகுதி நாவிகன் என்றே இருத்தல் வேண்டும். இதன் பொருள் நாவாய் ஓட்டி (மாலுமி) என்பதாகும். தமிழிலுள்ள மாலுமி எனும் சொல்லுக்கு ஈடாக ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் NAVIGATOR எனும் சொல்லுக்கும் நாவிகன் எனும் தமிழ்ச் சொல்லுக்குமிடையே காணப்படும் ஒத்தோசையும் (RHYTHM) இங்கு கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த இரண்டு ஊர்ப் பெயர்களுக்கும், வல்வெட்டித்துறை பிரதேசத்திலுள்ள உடுத்துறை என்னும் ஊர்ப்பெயர்ச் சொல்லுக்குமிடையே ஓர் ஒற்றுமை உண்டு. தற்போது உடுத்துறை என்று வழங்கப்படும் இச்சொல் உருத்துறை என்றே இருத்தல் வேண்டும். ஏனெனில் உரு என்னும் சொல்லுக்கு கப்பல் என்றே பொருள். உரு வந்து போகும் இடம் உருத்துறை என்று அழைக்கப்படுதலே வழக்கு ஆகும்.

இன்னும் NAVI என்னும் ஆங்கிலச் சொல் NAVIS என்னும் இலத்தீன் சொல்லையா அல்லது நாவாய் என்னும் தமிழ்ச் சொல்லையா மூலமாகக் கொண்டது எனும் கேள்விக்கு ஆய்வாளர் விடை காணுதல் மொழித்துறைக்கு அவர்கள் செய்யும் அரிய பணியாகும்.

மண்வாசம் கமழும் தமிழ்ச் சொற்களில் மாங்காய், கறி, சந்தனம், இஞ்சி என்பன குறிப்பிடத்தக்கவை. ஆயினும் இச்சொற்கள் இன்று ஆங்கில அகராதி என்னும் அரியணையில் MANGO, CURRY, SANDAL, GINGER என்னும் பெயர்களில் அமர்ந்திருப்பதைக் காணும்போது தமிழர் நெஞ்சங்களில் தானாகவே மகிழ்ச்சி நிறைந்து வழியும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

அனைவர் வாயிலும் இன்று அடிக்கடி இடம்பெறும் சொற்களில் ஒன்று ஊடகம். MEDIUS எனும் இலத்தீன் சொல்லில் இருந்து பிறந்த MEDIA எனும் ஆங்கிலச் சொல் BY அல்லது THROUGH என்னும் சொற்கள் தரும் பொருளை தந்து நிற்கும். இதனை அடியொற்றி எழுந்த ஊடகம் என்னும் சொல் ஊடாக எனும் பொருளைத் தரும் ஊடு எனும் தமிழ்ச் சொல்லைப் பகுதியாகக் கொண்டது.

ஊடகங்களில் தற்போது உலாவரும் சொற்களில் மெகா (MEGA) என்பதும் ஒன்று. இதற்குப் பெரிய என்று பொருள். இச்சொல் MAGNUS என்னும் இலத்தீன் சொல் மகா என்னும் வடமொழிச் சொல் ஆகியவற்றோடு மிக நெருக்கமானது. ஏனெனில் இவை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை.


சமயங்களால் சதாகாலமும் பயன்படுத்தப்படும் ஒரு சொல் ஆன்மா (ஆத்மா) இதுவும் ANIMA என்னும் இலத்தீன் சொல்லும் சகோதர உறவு பூண்டவை. ஆரம்ப காலத் தமிழ் எந்தவொரு சமயமும் சாராத மொழியாக இருந்தமையால் அதில் இத்தகைய சொற்கள் தோன்றவில்லை எனும் உண்மையை அதன் வரலாறு உணர்த்தும். மதம் என்னும் சொல்லுக்கும், சங்க காலத்தில் கொள்கை என்னும் பொருள் இருக்கவில்லை என்பதை அறிஞர் அறிவர்.

நாம் நன்கு அறிந்த ஒரு பெயர்ச் சொல் நல்ல பாம்பு. இதில் பெயரெச்சமாக உள்ள நல்ல என்னும் சொல் திராவிட மொழிகளில் ஒன்றான தெலுங்கு மொழிச் சொல் என்று கூறும் அறிஞர்கள் இதற்குக் கருமை என்றும் பொருள் உண்டென்பர். இதன்படி நல்ல பாம்பு என்றால் கரிய நிறத்தையுடைய கரு நாகம் என்றே நாம் பொருள் கொள்ளவேண்டும். நல்ல பாம்ப என்னும் சொல்லுக்கு நாகபாம்பு என்றே தமிழ் அகராதியும் பொருள் கூறும்.

நாகம் என்னும் சொல்லுக்கு மலை என்று பொருள். குறிஞ்சி நிலத்தைக் குறிக்கும் இச்சொல், அந்நிலம் பாம்புகளின் வாசஸ்தலம் என்பதை எடுத்துக்காட்டுவதோடு, நாகம் என்னும் சொல் நல்ல என்பதுபோல குறிப்பிட்டதொரு பாம்பின் அடைமொழி என்பதையும் அது உணர்த்தும்.

இது போன்றதே நல்லெண்ணெய் என்னும் சொல்லும். கரிய நிறத்தையுடைய எள்ளிலிருந்து பெறப்படும் எண்ணெய் என்பதனால் இது நல்லெண்ணெய் என்று அழைக்கப்படலாயிற்று.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஈழத்தமிழர், தமிழகத்தவர் போன்று கிரேக்கம், உரோமம், எகிப்து, சீனா முதலிய நாடுகளோடு வாணிபத் தொடர்புகள் வைத்திருந்தமையை நிரூபிக்கும் ஓர் ஊர்ப் பெயர் கிழக்கிலங்கை அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறையாகும். இச்சொல், சம்பான் (SAMPAN) எனும் சொல்லின் திரிபாகும். இதனைச் சீன மொழிச் சொல் என்று கூறும் ஒக்ஸ்போட்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகராதி, இதற்குப் படகு என்று பொருள் கூறும். இதிலிருந்து சீன நாட்டுப் படகுகள் வர்த்தகத்தின் பொருட்டு வந்து சென்ற துறை சம்பான் துறை என்றே குறிக்கப்பட்டது.

கதிரையும் மேசையும் தினமும் நாம் காணும் பொருட்கள். இவற்றை அறிஞர் பலரும் போர்த்துக்கீச மொழிச் சொற்கள் என்பர். ஆனால், இவை CATHEDRA (கதிரை), MENSA (மேசை) என்றும் இலத்தீன் சொற்களில் இருந்து பிறந்தவையாகும்.

தமிழில் உள்ள சொற்களில் குறிப்பிடத் தக்க எண்ணிக்கையுடைய சொற்கள், வட மொழிச் சொற்களாகும். அவற்றின், மாதா, பிதா, தெய்வம் என்பன மிகவும் பிரசித்தி பெற்றவை. இவை MATER (மாதா), PATER (பிதா), DEO (தேவா) ஆகிய இலத்தீன் சொற்களோடு உறவு உடையது. MOTHER, FATHER என்னும் ஆங்கிலச் சொற்களும் அச்சொற்களின் (MATER, PATER) திரிபு என்பது எளிதில் விளங்கும்.

**- தொடரும் -**

**- கவிஞர் வாகரைவாணன் -**

---

முத்திப் பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளாரின்
விண்ணகப் பிறப்பின் 300வது ஆண்டை நோக்கிய....



# மாபெரும் கட்டுரைப் போட்டி

**தலைப்பு**

**"முத்திப் பேறுபெற்ற யோசேப்வாஸ் அடிகளாரின் மறைபரப்புப் பணி இலங்கைத் திருச்சபையில் ஏற்படுத்திய தாக்கங்கள்"**

**விதிமுறைகள்**

01. திறந்த போட்டி - வயதெல்லை கிடையாது.
02. சொற்கள் 2500 - 3000 வரையாகும்.
03. A4 அளவுத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுதல் வேண்டும்.
04. எதிர்வரும் 31.03.2009ற்கு முன்னர் ***"யோசேப்வாஸ் செயலகம், ஆயர் இல்லம், மட்டக்களப்பு"*** என்ற முகவரிக்கு கட்டுரைகள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
05. வெற்றியாளர்களுக்கு விருதும் பணப்பரிசும் வழங்கப்படும்.

**1ம் பரிசு - ரூபா 6,000.00**
**2ம் பரிசு - ரூபா 3,000.00**
**3ம் பரிசு - ரூபா 2,000.00**

06. தனியான தாளில் போட்டியாளரது பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், பங்கு என்பன தெளிவாக எழுதப்பட்டு இணைக்கப்படல் வேண்டும்.

**தொடர்புகளுக்கு**

Rev. Fr. எஸ். மதுராங்கன் குரூஸ், இணைப்பாளர், யோசேப்வாஸ் செயலகம்,
ஆயர் இல்லம், மட்டக்களப்பு
T.P - 0779797230



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வலிக்கும் இரணங்கள்

என்னால் அவனைக்
காப்பாற்றியிருக்க முடியும்!
ஏன் என்னால் முடியவில்லை..?
அவனது மரணிப்புக்கு நானும்
ஒரு காரணியா?
என்னையே என்னால்
ஆசுவாசப்படுத்த முடியாமல் என்
மனம் தீயாய்த் தவித்தது.
ஒரு கணம் என்ன....
ஒவ்வொரு கணமும் என்
மனச்சாட்சி என்னைத் தீயால்
சுட்டுக்கொண்டே இருந்தது.
காலங்கள் கடந்தாலும் அந்த
"சுனாமியின்" கோர வடுக்களை
மூன்றாவது வருடமாகவும்
ஞாபகப்படுத்த விரும்பாமல்
வடுக்கள் என்னை வாட்டி
எடுத்தன.
உளவளப் பணியில் ஆர்வமான
என்னை செயலாளர்
சேதமடைந்த கட்டடங்களைப்
பார்த்து அறிக்கையிடச்
சொன்னதை நினைத்துச் சற்று
நகைத்துக்கொள்கின்றேன்.
தட்ட முடியாமல் இட்ட
கட்டளையை நிறைவேற்ற
கமராவுடன் எனது பயணம்
அக்கரைப்பற்றை நோக்கி
நீண்டது. உடைந்த
பாடசாலைக் கட்டடங்கள்....
வகுப்பறைகள்... அலுவலக
அறைகள், தளபாடங்கள் முற்றிலும்
சேதமாகித்தான் இருந்தன.
ஓர் அழிவின் கோரக்
காட்சிகள்....
அதை அவதானித்து பதிவு
செய்யும் பணிகளை எனது
வாகனச் சாரதி வரதனிடம்
விட்டுவிட்டேன்.
இயல்பாகவே எனது மனம்
உடைந்து போன, தகர்ந்து
போன வடுக்களைத்
தாங்கமுடியாமல் பரிதவிக்கும்
மனங்களைத் தேடியே
அலைந்தது.
ஆமாம்... காரைதீவு
வித்தியாலயம் அன்று அல்லோல
கல்லோலப்பட்டது.
சுனாமிப் பாதிப்பு அங்கு
அகோரம்தான்.
ஆனால்,
அகதி



வாழ்வில்
அனைவரும்
ஒன்றாக
நெருங்கி
வாழ்வதில் பல
துயரங்கள்
தற்காலிகமாகமாவது
மறைந்து
போயின.
உணவுக்காக ஒரு
கியூ...
உடைக்காக மற்றொரு கியூ...
படங்கு, தளபாடம்
என்றவாறெல்லாம் பல
நிறுவனங்கள் அவசரகால நிலை
உதவிகளை
வழங்கிக்கொண்டிருந்தன.
அந்தப் பாடசாலையில்
தங்கியிருந்த அனைவருமே
அப்பணியில் மும்முரமாக
ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்...
ஒரே ஒருவரைத் தவிர... அந்த
அனைத்து மக்களையும் பற்றி
கவராத என் கவனம் தன்னைத்
தனியனாக...
மண்டபத்தின் ஓரத்தில்...
துவாய் ஒன்றைப்
போர்த்தியவாறு
இந்த முகாமின்
நடவடிக்கைகளில் எதிலுமே
கவனம் செல்லாமல்... கவனம்
செலுத்த விரும்பாமல் எதையோ
எண்ணியவாறு சுவரில் சற்றுச்
சாய்ந்திருந்தான்....
அவனை அண்மித்தேன்...
அவனது விழிகள் ஈரமாகித்தான்
இருந்தன...
விழியோரத்தில்
நீர் வற்றிய தடம்
எனக்குத் துல்லியமாகத்
தெரிந்தது.
பக்கத்தில்
அமர்ந்துகொண்டேன்...
என்னை ஒரு பொருட்டாகவே
அவன் நினைக்கவில்லை....
அவனது தோளை எனது
கையால் தொட்டேன்...
உடம்போ... தலையோ
அசையாமல் கண்கள் மட்டும்
எனது பக்கம் திரும்பின...
வெறித்தன... வெறுப்பை
உமிழ்ந்தன. மீண்டும் பழைய
நிலைக்கே திரும்பின...
அந்தக் கண்களை
ஊடுருவினேன்...
எத்தனை சோகம்... எத்தனை
விரக்தி... எத்தனை
பதகளிப்பு... இயலாமையின்
வெளிப்பாடு...
ஏன்... ஏன்... ஏன்...
என்னுள் பல கேள்விகள்...
விடை தெரிய ஆவலாய் அலை
மோதின...
இப்போதைக்கு இவன் பேச
மாட்டான்.....
விட்டுப் பிடிப்போம்...
மைமல் பொழுதாகிவிட்டது.
நாளை வருவோம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சம்மாந்துறை அலியார் சேரின் வீட்டில் தங்குவதற்காகச் சென்றுவிட்டோம்.
இரவு முழுவதும் மனதுள் பல எண்ண ஓட்டங்கள். வரதனுடன் அளவளாவினேன். டிரைவர் என்றாலும் மனம் விட்டுப் பேசக்கூடிய வகையில் பக்குவம் வரதனுக்கும் இருந்தது; தீர்மானத்துக்கு வந்தேன்.

மறுநாள் சம்மாந்துறையில் ஒரு சேட் வாங்கி எனது ஒரு டிரௌசரையும் ஒரு பையினுள் போட்டு அவனிடம் மீண்டும் சென்றேன். ஒரு மணியாகியும் அதே இடத்தில் சற்று ஒருக்களித்துச் சாய்ந்திருந்தான். சுமார் 45 வயதிருக்கும்...

"இவனைத் தெரியுமா உங்களுக்கு?"

பக்கத்திலுள்ளவர்களிடம் வினாவினேன். சரியான பதில் கிடைக்கவில்லை.
காலைச் சாப்பாடு வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது. அவனுக்காக நானும் கியூவில் நின்று பாண் ஒரு துண்டும் பருப்புச் சொதியும் பெற்றுக்கொண்டேன்.
அவனை அண்மித்துத் தட்டி எழுப்பி
சாப்பிடுங்கோ...
பசிக்கவில்லையா?
என்னை ஒரு கணம் ஏறிட்டான். ஒரு புன்சிரிப்பு...
ஏதோ அறிமுகமான ஒருவரைக் கண்டதுபோல பக்கத்தில் அமர்ந்துகொண்டேன்.
ஒரு துண்டுப் பாணை சொதியில் துவைத்து நானும் வாயில் வைத்துக்கொண்டேன்.
அது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது போலும். எழுந்து போத்தலில் இருந்த நீரால் வாய் அலம்பிவிட்டு பாணைச் சாப்பிடத் தொடங்கினான்.
என்னையும் சாப்பிடச் சொன்னான்.
சம்மாந்துறை பேக்கரியில் வாங்கி வந்த கறிபணிஸை எடுத்து அவனுக்கும் வைத்துவிட்டு நானும் சாப்பிட்டேன்.
எனது ஒரு கை அவனது தோளில் மெல்ல மெல்ல தடவத் தொடங்கியது.
அன்பாக... ஆதரவாக... மெது மெதுவாக...
கடலின் உவர்த்தன்மை முதுகில் தடங்களாகப் பொரிந்திருந்தன.
சாப்பிட்டு முடிந்ததும் மெல்ல கதைக்க ஆரம்பித்தேன்...
கை முதுகை, தோளை விட்டு அகலவில்லை...
இடையிடையே அவனது கரங்களையும் பற்றிக்கொண்டேன்...
எனது ஆசுவாசப்படுத்தலில் அவன் ஆட்பட்டதன் பிரதிபலிப்பாக... கண்களில் நீர்த்தாரை... உதட்டில் விம்மல்கள்... தனது தலையை எனது தோளில் சாய்த்தான்...
எனக்குச் சாதகமாயின. மிகவும் மெலிதாக அன்பாக ஆறுதலாக எனது ஆற்றுப்படுத்தலை ஆரம்பித்தேன். சுனாமி வந்த அன்றைய சம்பவங்களை முதன் முறையாக என்னிடமே கொட்டித் தீர்த்தான்.
கடலுக்கண்மையில் புதிதாகக் கட்டிய வீடு...

தனது மனைவியுடனும் இரு குழந்தைகளுடனும் வங்கியின் பாதுகாப்பு அலுவலராகப் பணியாற்றும் சம்பளத்துடன்



## மனித மூளையைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள்

- மனித உடலின் மிக முக்கியமான பகுதி மூளையாகும்.
- மனித மூளையின் எடை 1360 கிராமாகும்.
- மூளையில் உள்ள நரம்புக் கலங்களில் எண்ணிக்கை 1400 கோடியாகும்.
- மனித மூளை தன் ஆயுள் காலத்தில் 10 கோடி செய்திகளைச் சேமிக்கும் திறன் கொண்டதாகும்.
- மூளையில் கல்வியைக் மட்டுப்படுத்தும் பாகம் "கார்டைக்ஸ்" பெருமூளையாகும்.
- தாயின் வயிற்றில் குழந்தை கருத்தரித்து 18வது நாளிலேயே அதன் மூளை வளர ஆரம்பிக்கிறது.
- மனித உடம்பில் முதலில் இறக்கும் பாகம் மூளையின் கலங்களாகும்.

செல்வன் டெலன் செலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிம்மதியான வாழ்வு, கடற்கரைக்
காற்றும்... கால் புதையும்
மணலும் அதிர்ஷ்டக்
காரர்களாகவே எண்ண
வைத்தன.
அன்று காலை குளியலறையினுள்
காலைக்கடன் கழிக்கப்
போயிருந்தவேளை...
திடீரென நடந்த சம்பவம்...
பலத்த பேரொலியுடன்
மலையென வந்த அலை
அவனை அருகிலிருந்த
பனைமர உச்சிக்குக் கொண்டு
சென்றது.
ஆசுவாசப்படுத்த முன்....
நடப்பது என்னவென்று அறிய
முயலுமுன்... தன் கண்முன்னே
தான் ஆசை ஆசையாய்க்
கட்டிய வீடு அந்த அகோர
அலையில் தூளாகிப் போனதைக்
கண்டு வெலவெலத்துப்
போனான்.
அடுத்தும் வருமா அலை... ஆம்
வந்தது... மீண்டும் ஒரு முறை
எஞ்சியதை எல்லாம்
சுருட்டிக்கொண்டு செல்ல...
பயத்திலும் குளிரிலும் அலையால்
புரட்டித் தகர்க்கப்பட்டு
நொந்துபோன உடலோடு
மரத்திலிருந்து இறங்க ஒரு
மணித்தியாலம் பிடித்தது.
எங்கும் மனித அவலம்...
பிணங்களின் குவியல்கள்...
அத்திவாரம்கூடி
எற்றுப்பட்டுப்போன வீடுகள்...
கண்ணுக்கு எட்டிய தூரம்வரை
ஒரே வெளியாக இருந்தது.
அப்போதுதான் மனைவி
மக்களைத் தேடினான்...
பலரிடம் விசாரித்தான்... அகதி
முகாம்களில் அலசினான்...
தெரிந்தவர்களிடமும்
தெரியாதவர்களிடமும்
கேட்டான்...
உறுதியற்ற பதில்கள்...
அலைக்கழிக்கும் தகவல்கள்...
உறுதியற்றுத்தான் போனான்...
அலைக்கழிந்தும் போனான்...
அவன் குடும்பத்தை மட்டுமல்ல
அமைதியையும் இழந்தான்.
அலை அவன் வாழ்வைப்
புரட்டிப்போட்டு விட்டது. நான்கு
நாட்களாக தேடிச் சலித்து
சோர்ந்து துவண்டு பேதலித்துப்
போனான்...
விரக்தி... விரக்தி... அதைத்
தவிர வேறொன்றும்
மிஞ்சவில்லை...
அழுதழுது கூறி முடித்தான்
தழுதழுத்த குரலில்! ஆற்ற
முடியாமல் தவித்தேன்.
இப்படியும் ஒரு துன்பமா....?
மறுநாளுக்குரிய பணிகள்
என்னை அழைத்தன.
கோமாரி வரை செல்ல
வேண்டும்...
மீண்டும் வருவேன் என்ற உறுதி
மொழியுடன் வாகனத்தில்
ஏறினேன்.
அடுத்த இருநாட்களும் ஏகப்பட்ட
வேலைகள்...
வலயக் கல்விப் பணிப்பாளருடன்
அறிக்கை பெறுவதற்கான
சந்திப்புகள்...
தகவல் சேகரிப்புகள்...
இடைவிடாத வேலைகள்...
அவனைச் சந்திக்க
முடியவில்லை. ஜனவரி 03....
சகல அரச வங்கி ஊழியர்களும்
பணிக்கு வரவேண்டும் என்ற
அரசாங்க அறிவித்தல்
வானொலிகளில் ஒலிபரப்பானது.
காலை 9.30 மணி...
சம்மாந்துறைக் கல்வி
அலுவலகத்தில்
பணிப்பாளருடன் வேலையாக
இருந்தேன்.
டுமீல்....!
வெடிச் சத்தம்... சுனாமி
வேளையில் ஏன் இந்தச்
சத்தம்...?
சத்தம் கேட்டதும் வங்கியிருந்த
திசையை நோக்கி அனைவரும்
ஓடினர்...
சற்றுத் தாமதித்து நானும் ஓடிச்
சென்று வங்கியை
அடைந்தேன்....
அவன்தான்... அவனேதான்....
நான் கொடுத்த அதே சேட்...
டிரௌசர்.... வங்கிப்
பாதுகாப்புக்குக் கொடுத்த
துப்பாக்கியால் தன்னையே
சுட்டு...
விக்கித்துப் போனேன்...
ஏனிப்படிச் செய்துவிட்டான்...?
மனவடுவின் பிரதிபலிப்பான
இழிவிரக்கம் அதிகமாகி
தற்கொலைக்குத்
தூண்டப்பட்டானா...?
என்னால் தடுத்திருக்க
முடிந்திருக்குமே...
தொடர்ச்சியாக இவனுடன்
ஈடுபட்டிருந்தால்...
ஐயோ.... நெஞ்சு குற்ற உணர்வால்
வலித்தது... ஆற்றுகையா....
அலுவலகப் பணியா....
தொலைந்துபோன
குடும்பத்தைத் தேடி
அலைந்தவன் இப்படிக்
குலைந்து போனானே....
பொலிஸ் விசாரணை....
எனது வாக்குமூலத்தையும்
கொடுத்தேன்...
வைத்தியசாலைக்கு "அவன்"
கொண்டு சொல்லப்பட்டு
வைத்தியரின் அறிக்கை
தற்கொலை என முடிவானது.
அடக்கம் பண்ண வேண்டுமே...
உறவினர்கள்... யாரும் மாலை
வரை செல்லவில்லை.
பசி வயிற்றைக் கிள்ளியது..
காலையிலிருந்து எதுவும்
சாப்பிடவில்லை...
வாகனத்தினுள் ஏறி போத்தல்
நீரைக் குடித்துச் சற்று
சாய்ந்திருந்தேன்...
உறங்கிவிட்டேன்.
திடீரென
"அவன்" வைக்கப்பட்டிருந்த
வாட்டிலிருந்து ஒப்பாரி ஓலம்...
திகைத்தபடி ஓடினேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவன் மனைவி "அவனை"
கட்டிப்பிடித்தபடி
அலறிக்கொண்டிருந்தாள்...
பக்கத்தில் இரு பிள்ளைகளும்.
ஹா.... ஏனிப்படி....?
குழம்பினேன்... விடை தேடி...
நியாயம் தேடி... என் மனம்
சலித்துத்தான் போனது
இறைவா.....!
அவள் புலம்பி அழுதாள்...
ஐயோ நீங்க பாத்ருமுக்குப்
போனதும் தண்ணி
வந்ததையா...
பிள்ளைகளைத்
தூக்கிக்கொண்டு றோட்டில்
அல்லவா ஓடினேன்...
உங்களைத் திரும்பிப் பார்க்க
முடியாமல் எஸ்.ரி.எப் றக்கில்
ஏற்றி அம்பாறையில் கொண்டு
விட்டார்களே... தானுண்டு தன்
வேலையுண்டு என்றிருந்த
உங்களுக்கு இந்த
நிலையா.....?
விசாரித்து விசாரித்து சோர்ந்து
போனேனே ஐயா....
இப்படிச் செத்துவிட்டாயே....
அவளின் ஓலம்... அவலம்...
என் கண்களில் ஆறாக நீரை
உகுக்க வைத்தது...
என் விம்மலை... அதன்
அர்த்தத்தை யாரால் உணர
முடியும்?
ஆம்...
என்னால் அவனைக்
காப்பாற்றியிருக்க முடியும்...
மீண்டும் இன்னொரு முறை
இத்தவறைச் செய்ய மாட்டேன்.
நெஞ்சில் வலி... இன்னும்
வலித்துக்கொண்டுதான்
உள்ளது.
ஹூம்ம்ம்.......!

(யாவும் கற்பனையல்ல)

**கிறிஸ்டி முருகுப்பிள்ளை**

4ம் பக்கத் தொடர்ச்சி...

அதனைத் தொடர்ந்து சிறப்பு அதிதிகளின் உரைகள் இடம்பெற்றன. தொண்டன் சஞ்சிகையின் முன்னாள் ஆசிரியரும், இயக்குனரும், கிழக்குப் பல்கலைக்கழக திருமலை வளாகத்தின் முன்னாள் விரிவுரையாளரும் துறைத் தலைவருமான அருள் தந்தை சி. பி. இராஜேந்திரம் அவர்களும், அவரைத் தொடர்ந்து திருகோணமலை எகெட் பணிப்பாளரான அருள்தந்தை F. X. டயஸ் அவர்களும் உரை ஆற்றினார்.

தொடர்புத்துறை வல்லுனரான சி. பி. இராஜேந்திரம் அவர்கள், தொடர்புத் துறை பற்றியும் நிலையத்தின் செயற்பாடுகள் பற்றிய ஒரு கோடு காட்டலாகவும் உரை வழங்க,

அருள்தந்தை F. X. டயஸ் அவர்கள் தொண்டன் உருவான நோக்கம், சூழல் அதன் வளர்ச்சி பற்றி தமது உரையில் குறிப்பிட்டார்.

சிறப்புரைகளைத் தொடர்ந்து புனித மரியாள் பேராலய பங்குக் குழுவினரின் நடன நிகழ்வு இடம் பெற்றது.

நடனத்தை அடுத்து தொண்டன் 40வது ஆண்டு சிறப்பு மலர் ஆயர் அவர்களால் வெளிட்டு வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தொண்டன் நாற்பது ஆண்டு கால வரலாற்றுப் பின்னணியில் நயவுரை வழங்கினார் திருகோணமலையில் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான தா. பி. சுப்பிரமணியம் அவர்கள்.

நயவுரையைத் தொடர்ந்து சிறுகதைப் போட்டியில் வென்றவர்களுக்கான பரிசளிப்பும் அதனையடுத்து பாலையூற்றுப் புனித லூர்து அன்னை ஆலயப் பங்குக் குழுவினரின் நடனமும் இடம் பெற்றன. இவர்களே வரவேற்பு நடனத்தையும் வழங்கியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து தமிழ்ப் புலவரும், எழுத்தாளரும், பேச்சாளரும், கிறிஸ்தவப் பணியாளருமான புலவர் A. W. அரியநாயகம் அவர்கள் அவர்தம் நீண்டகாலப் பணிக்காக பொன்னாடை போர்த்தி, மாலை சூட்டி, விருது வழங்கி, பொற்கிழி அளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

அவரைப் பாராட்டி உரை வழங்கினார் அருள்சகோ. கலாநிதி. எஸ்.ஏ.ஐ. மத்தியு அவர்கள்.

இதனைத் தொடர்ந்து தொண்டனுக்குத் தொண்டு செய்த, ஆசிரியராக, எழுத்தாளராக, அதிகூடிய விநியோகத்தர்களாக மற்றும் உடன் பணியாளர்களாக என பலரும் விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர்.

இறுதியாக திரு. போல் பிரகாஷ் அவர்கள் நன்றி நவில, விழா இனிதாக நிறைவு பெற்றது. நிகழ்ச்சிகளை திரு. நவநிதி தொகுத்து வழங்கினார்.

திருகோணமலையில் தொண்டன் 40வது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெற பெரிதும் ஒத்துழைத்த திரு. போல் பிரகாஷ், திரு. கே. எஸ். கொலின் ஆகியோர் நமது நன்றிக்குரியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## சூரிய நமஸ்காரம்

**ஒரு ஆசனத்தின் மூலம் பல ஆசனங்களின் பலனைப் பெறலாம்.**

இயற்கை எமக்குக் கொடுத்த ஓர் அற்புதமான கொடைதான் சூரியன். எல்லா உயிர்களுக்கும் சக்திகளுக்கும் சூரியனே ஆதாரம் என்று விஞ்ஞானம் கூறுகின்றது. இதையே வேதகால சாஸ்திரங்களும் கூறுகின்றன. பல நோய்களை சூரிய சக்தியால் குணமாக்கலாம் என்று ஆய்வுகள் குறிப்பிட்டாலும் எமது கண்முன்னே தோல், கண் போன்ற பல நோய்கள் குணமாவதை அவதானித்திருப்பீர்கள். சூரியக் கதிர்கள் நம் உடலில் படுவதால் நமது சக்தி அதிகரிக்கின்றது. இதில் சுவாசப் பயிற்சிகள், ஆசனப் பயிற்சிகள், உடல் தளரும் பயிற்சிகள் என்பன அடங்கியிருப்பதால் அனைவரும் கற்று நோயற்ற வாழ்வு வாழவேண்டும் என்பதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

## சூரிய நமஸ்காரம் செய்வதால் ஏற்படும் பலன்கள்

**உடலில் உள்ள எல்லா உறுப்புகளுமே பயனடைகின்றன. இந்த ஆசனத்தின் சிறப்பே இதுதான்.**

- சோர்வையும், சோம்பலையும் ஒழிக்கின்றது.
- அலைபாயும் மனதை ஒருமுகப்படுத்துகின்றது.
- நீண்ட ஆயுள் உண்டாகும்.
- சுவாசம், இரத்த ஓட்டம் என்பன சீராக நடைபெறுகிறது.
- உடலை எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கச் செய்கின்றது.
- உள நெருக்கீட்டைப் போக்கி மன நிம்மதியைத் தருகின்றது.
- என்றும் இளமையுடன் வாழ வழி செய்கின்றது.
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்கின்றது.
- மனதிலுள்ள கவலை, கலக்கம் முதலியவற்றை நீக்குகின்றது.
- நமது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்கின்றது.
- உடல் படபடப்பைப் போக்குகின்றது. வயிறு நன்கு சுருங்கி விரிவதால் கல்லீரல், பெருங்குடல், சிறுகுடல், சிறுநீரகங்கள் போன்றவை நல்ல முறையில் இயங்கும்.

## இதனால் தீரும் நோய்கள்

- உடல் எடை குறைகின்றது.
- நரம்புத் தளர்ச்சி நோயைப் போக்க உதவுகின்றது.
- மாதவிடாய்க் கோளாறுகளைச் சரி செய்கின்றது.
- ஒற்றைத் தலைவலி, மூட்டுவலி, இடுப்புவலிகள் போன்றவைகள் மறையும்.
- வயிற்றுக் கோளாறுகளைத் தடுக்கின்றது.
- கண்பார்வை, கிட்னி கோளாறுகளைச் சரி செய்கின்றது.
- மலச்சிக்கல், வாயுக் கோளாறுகளைச் சரி செய்கின்றது.
- தலைமுடி உதிர்வதைத் தடுக்கின்றது.
- சுவாசம் தொடர்பான கோளாறுகளைச் சரி செய்கின்றது.
- நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், குடல், முதுகுத் தண்டு ஆகியவை பலம் பெற்று நோய் வராது பாதுகாக்கின்றது.

## குறிப்பு

- அதிகாலை சூரியன் உதயமாகும்போது, சூரிய ஒளி உடலில் படும்போது இவ்வாசனம் செய்தால் நல்ல ஆரோக்கியம் பெறலாம்.
- 24 மணித்தியாலம் மகிழ்ச்சியாக வாழ 10 நிமிடத்தைத் தியாகம் செய்யுங்கள்.

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறப்பான வாழ்க்கை அவசியமா?

**"ஆண்டவருடைய கண்கள் எங்கும் நோக்கும்; எல்லாரையும் பார்க்கும்; பொல்லாரையும் பார்க்கும்"**

*நீதிமொழி 15:3*

தானாக வருவதில்லை கவலை; அது நீயாக வருவிப்பதுதான். எத்தனை பிரச்சினை மனித வாழ்வில்! வாழ்க்கையில் பிரச்சினை இல்லாத மனிதனே இல்லை. அது யாராக இருந்தாலும் சரிதான். ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வகையான பிரச்சினைகள் தோன்றும்.

பொருளாதார வளம் உடையவராக இருப்பவருக்கும் பிரச்சினை, பொருளாதார வளம் அற்றவர்களுக்கும் பிரச்சினை. என்ன அந்தப் பிரச்சினை? வெளியில் சொல்ல முடியாத பிரச்சினை. மற்றவர் அறிந்தால் ஏளனம் செய்வர் என்ற பயம். அதனால் வெளியில் கூறாது அந்தப் பிரச்சினையில் வெந்து வெதும்பி உருக்குலையும் உள்ளங்கள் எத்தனை?

மேலெழுந்தவாரியாக நமக்கு இருக்கும் பிரச்சினைகளைப் பட்டியற்படுத்தினால் கடன் தொல்லை, கணவன் குடிகாரன், நோய்கள், பிள்ளையின் கல்வி, பக்கத்து வீட்டுப் பிரச்சினை? பிள்ளை காதல் வலையில் சிக்கியது, பிள்ளையின் கலியாணப் பிரச்சினை? சகோதர சகோதரிகளுக்கிடையே பிரச்சினை, கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள் குடும்பப் பிரச்சினை, வேலை கிடைக்கவில்லை அல்லது தொழில் செய்யும் இடத்தில் பிரச்சினை, உழைப்பு வருமானம் போதாத பிரச்சினை என்று இப்படியாக அடுக்கிக்கொண்டே போகலாம். ஒரு பிரச்சினையிலிருந்து இன்னொரு பிரச்சினை ஏற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு.

இவ்வாறு பிரச்சினைக்கு மேல் பிரச்சினை மனிதனுக்கு ஏற்படுவது ஏன்? எல்லாமே உன் கையில்.

எல்லாமே என் கையிலா? பிரச்சினைகளுக்கு நானா காரணம்? நான் என்ன செய்தேன்? நீ பாவம் செய்தாய்; அதுதான் பிரச்சினைகள் வரக் காரணம். அப்படி நான் பாவம் செய்யவில்லையே. உன்னை அறியாமல் செய்கிறாய். அறியாமல் செய்வது பாவம் இல்லையே. யார் சொன்னது? அறியாமல் செய்வது பாவமா இல்லையா என்பதைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்று பார்ப்போமா?

அறியாமை பற்றி பழைய ஏற்பாட்டில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? அறியாமை என்பது தெரியாமல் ஒருவன் தவறு செய்ய வாய்ப்பளிக்கும். அறிந்து செய்யப்படும் தவறைவிட அறியாமல் செய்யும் தவறு அற்பமானதே. இருந்தாலும் பரிகாரம் செய்யப்பட வேண்டியதாகும். (காண்க. திருவுரை 5:6, 10:5 லேவி 4:2, 5:5-18 எண் 15:24-29,35:11)




அறியாமையால் ஏற்படும் தவறு குருடன் வழிதப்புவதற்கு ஒப்பாகும். குடிவெறியால் தள்ளாடுவது போன்றதாகும். உணர்ச்சிகளின் தடுமாற்றமாகவும், அறிவு மற்றும் ஒழுக்கத் தவறாகவும் இருக்கலாம். விவிலியக் கண்ணோட்டத்தின்படி ஒருவன் அறியாமையாலும் தவறு இழைக்கக் கூடாது. அறியாமை ஒருவனை பாவத்தின் விளைவிலிருந்து தப்புவிக்காது. பாவத்தின் விளைவு எப்போதும் பாவச் செயலுடன் சேர்ந்து வரும். எனவே அறியாமையினால் செய்யப்பட்ட தவறுக்கு பரிகாரம் செய்யப்படவேண்டும். அறிந்து செய்த பாவத்துக்கு சடங்கு பரிகாரமே இல்லை எனப் பழைய ஏற்பாடு கூறுகின்றது.

புதிய ஏற்பாடு என்ன சொல்கிறது என்று பார்த்தால் உண்மையான அறிவு அற்ற நிலை அல்லது குறைந்த அறிவுடைய நிலை என்பதாகும். அறியாமை என்பது மயக்கமான நிலையினையும் குறிக்கோளற்ற நிலையையும் புரிந்துகொள்ளாத நிலையையும் குறிக்கும். அறியாமை இருள் அகல ஒருவன் புரிந்துகொள்ளும் தன்மை பெறவேண்டும். அறியாமை பாவத்திற்கு இட்டுச் செல்லும். (காண்க. 2கொரி 6:9 கலா 1:22 அ.ப 17:23 உரோ 2:4 2கொரி 2:11 மாற் 9:32 லூக் 9:45 உரோ 6:3, 7:1 பேதுரு 2:15 2பேதுரு 2:12)

ஆகவே, விவிலியக் கோட்பாட்டின்படி அறியாமையால் செய்யும் பாவம் நம்மை பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லும் என்பதை மறக்கக் கூடாது.

**– ஜெமாய்மா –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆண்டு ஒன்று போனால்

ஆண்டு ஒன்று போனால் வயதொன்று போகும் என்பது யாவரும் அறிந்ததே. ஒரு மனிதனுக்கு ஆயுட்காலம் நூறு ஆண்டுகள். இலங்கையில் ஆண்களுக்கு எழுபதும், பெண்களுக்கு அறுபதும் சராசரி ஆண்டுகளாகக் கணிக்கப்பட்டுள்ளன. அதேபோல ஒவ்வொரு உயிரினங்களுக்கும் வயதெல்லை கணிக்கப்பட்டுள்ளது. நம்மில் பலருக்கு நமது வயது என்னவென்று சொல்ல விருப்பமேயில்லை. நமக்கு வயது போகிறதே என்ற உள்ளுணர்வு நம்மை அறியாமலே நம்மை அரிக்கிறது என்பதுதான் உண்மை. இப்படி சிலருக்கு வயது போவது கவலை. சிலருக்கு வயது போய்விட்டதே என்ற கவலை. வயது போனால் அழகு குறைந்துவிடுமே என்ற கவலை. அதிலும் முதுமையைக் குறித்தல்ல, இத்தனை வருடங்களையும் வீணாக்கி விட்டோமே என்ற கவலை. இவைகளிலே நாம் எந்த ரகம்? இத்தனை காலம் வழிநடத்தி, நம்மைக் காத்து, பராமரித்து வந்த கடவுளுக்கு மிகுதியாக மிஞ்சியிருக்கும் காலத்தில் நாம் என்ன செய்யப்போகிறோம்? என்று சிந்திப்பவர்களே, வாழ்வின் வெற்றியைச் சுவை பார்க்க முடியும்.



ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் உலகில் கடவுளை அறிந்தும் அறியாமலும், கிறிஸ்தவக் குடும்பத்தில் வாழ்ந்த ஒருவனை கடவுள் எப்படி வழிநடத்திக் காத்து பராமரித்து வந்துள்ளார் என்ற நன்றி உணர்வோடு நாம் என்ன செய்யப் போகிறோம்? எஞ்சியுள்ள காலத்தில் கடவுளுக்காக ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணம் மேலோங்க வேண்டாமா?

கடவுள் ஆபிரகாமை அழைத்தபோது அவருக்கு வயது எழுபத்து ஐந்து. மோசேயை பார்வோனிடம் அனுப்பும்போது அவருக்கு வயது எண்பது. ஆரோனுக்கு வயது எண்பத்து மூன்று. இயேசு பாலனைக் காண அன்னாள் காத்திருந்தது எழுபத்து நான்கு ஆண்டுகள். பெரும் பாடுடைய பெண் குணமடையச் சென்றது பன்னிரெண்டு ஆண்டுகள். பெத்சாயிதா குளத்தருகே, நோயுற்ற ஒருவன் குணமடைய முப்பத்து எட்டு ஆண்டுகள் சென்றது. கிறிஸ்துவும் தம் ஊழியத்தை ஆரம்பிக்க முப்பது ஆண்டுகள் காத்திருந்தார்.

இந்த நீண்ட காலம் அத்தனையும் வீண் எனக் கூற முடியுமா? எனவே, நமது வயது என்னவாகவாவது இருக்கட்டும். நாம் எவ்வளவு காலம் வாழ்ந்தோம், வாழப் போகிறோம் என்பது முக்கியம் அல்ல. கடவுளுக்காக என்ன செய்தோம் என்பதுதான் முக்கிய கேள்வி. எவ்வளவு காலத்தை இழந்துவிட்டோம் என்பதல்ல, இருக்கிற காலத்தில் என்ன செய்யப் போகிறோம் என்பதை நாமே தீர்மானிப்போம். எப்போதும் கடவுள் நம்மைப் பயன்படுத்த விரும்புகிறார் என்ற உண்மையை நாம் மறத்தலாகாது. புதிய ஆண்டில் அதற்கு ஆயத்தமாவோம். கடவுளே நீர் எமக்குத் தந்த காலத்தை உம்மிடம் தருகின்றோம். கடந்த காலங்கள் போகட்டும். இனி வரும் காலத்தை எமக்கு ஆசீர்வதியும் என அவரிடம் இரந்து கேட்டு அவர் தந்த காலத்தை பயனுள்ளதாக்க முனைவோம்.

– றெ. சிதம்பரி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
31- 3 - 2008

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 73

(எண்ணிக்கை 11:1–35)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவரின் செவிகளில் படுமாறு தங்கள் கடினப்பாடுகளைப் பற்றி மக்கள் முறையிட்டனர்; ஆண்டவர் அதைக் கேட்டபோது அவருக்குச் சினம் மூண்டது; ஆண்டவரின் ........................................ அவர்களிடையே பற்றி எரிந்தது; பாளையத்தின் கடைக்கோடிப் பகுதிகள் சிலவற்றை அது எரித்துவிட்டது. அப்போது மக்கள் மோசேயிடம் அழுதனர்; மோசே ஆண்டவரிடம் மன்றாடவே நெருப்பு அணைந்தது. எனவே அந்த இடத்துக்குத் ........................................ என்று பெயராயிற்று; ஏனெனில், ஆண்டவரின் நெருப்பு அவர்களிடையே எரிந்தது. மேலும் அவர்களிடையே இருந்த பல இன மக்கள் உணவில் பெரு விருப்புக் கொண்டனர்; இஸ்ரயேல் மக்களும் மீண்டும் அழுது கூறியது; "நமக்கு உண்ண ........................................ யார் தருவார்? நாம் எகிப்தில் செலவின்றி உண்ட மீன், வெள்ளரிக்காய், கொம்மட்டிக்காய், கீரை, வெங்காயம், வெள்ளைப்பூண்டு ஆகியவற்றின் நினைவு வருகிறது. ஆனால் இப்பொழுதோ நம்வலிமை குன்றிப் போயிற்று; ........................................ தவிர வேறெதுவும் நம் கண்களில் படுவதில்லையே!" 'மன்னா கொத்துமல்லி விதைபோன்றும் அதன் தோற்றம் முத்துப்போன்றும் இருந்தது. மக்கள் வெளியில் சென்று அதைச் சேகரித்தனர்; அரவைக் கல்லில் அரைத்தனர் அல்லது ........................................ போட்டு இடித்தனர்; பானைகளில் அதை வேக வைத்து அதில் அப்பங்கள் செய்தனர்; அதன் சுவை எண்ணெயில் செய்த அப்பங்களின் சுவையை ஒத்திருந்தது' இரவில், பாளையத்தின்மேல் பனி விழும்போது மன்னாவும் விழுந்தது. எல்லா வீடுகளிலுமிருந்த மக்களும் தம்தம் ............................ வாயிலில் இருந்து அழும் குரலை மோசே கேட்டார்; ஆண்டவரின் சினம் கொழுந்துவிட்டெரிந்தது; மோசேக்கும் அது பிடிக்கவில்லை. "நான் தனியாக இம்மக்கள் அனைவரையும் கொண்டு செல்லவே முடியாது; இது எனக்கு மிக ........................................ என்னைக் கொன்றுவிடும்" என்றார். ஆண்டவர் மோசேயிடம் "மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டிவா; உனக்குத் தெரிந்தவர்களாகவும், பெரியோர்களாகவும், அதிகாரிகளாகவும் இருக்கவேண்டும். நான் இறங்கி வந்து உன்னிலிருக்கும் ........................................ கொஞ்சம் எடுத்து அவர்களுக்கு அளிப்பேன்; அவர்களும் மக்களின் பளுவைத் தாங்குவார்கள். நீ மக்களிடம் ஆண்டவர் உங்களுக்கு இறைச்சி தருவார், ஒரு மாதம் முழுதும் உண்பீர்கள்; ஏனெனில் ஆண்டவரை ........................................ விட்டீர்கள் என்று சொல். ஆண்டவரின் வார்த்தையின்படியே உங்களுக்கு நடக்குமா, இல்லையா என்று பார்" என்றார். ஆண்டவர் கூறியபடியே நடந்தது. எல்தாது, ........................................ ஆகியோர் மீதும் ஆவி இறங்கியது. பாளையத்திலேயே இறைவாக்குரைத்தனர். யோசுவா "மோசே! என் தலைவரே! அவர்களைத் தடுத்து நிறுத்தும்" என்றார். ஆனால், மோசே அவரிடம் "இறைவாக்கினராகும்படி ஆண்டவர் அவர்களுக்குத் தம் ஆவியை அளிப்பது எத்துணைச் சிறப்பு" என்றார். பின் மோசேயும், இஸ்ரயேலின் மூப்பரும் பாளையம் திரும்பினர்.

**விடைகள் :** **கூடார, பெரும்பளு, மேதாது, புறக்கணித்து, ஆவியில், நெருப்பு, இறைச்சி, உரலில், மன்னாவை, தபேரா**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 73

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. கவிச்சக்கரவர்த்தி தந்த இறவாக் காவியம்
(கலிங்கத்துப் பரணி, களவழி நாற்பது, கம்பராமாயணம்)

2. உடலில் உள்ள மெல்லிய சருமம் இது
(உதடு, கண் இமை, கழுத்து)

3. உலகின் மிக உயரமான ‘வென்சுவான்’ நகரம் உள்ள நாடு
(சீனா, நேபாளம், பூட்டான்)

4. ‘குடவோலை’ என்பது...
(பனை ஓலை, ஓலைச் சுவடி, ஒரு தேர்தல் முறை)

5. ஆடு நனைகிறதே என்று அழுததாம்.....!
(மாடு, புலி, ஓநாய்)

6. ‘இ’ என்னும் உயிரெழுத்தில் முடியும் அளபெடை
(சொல்லிசை அளபெடை, இன்னிசை அளபெடை, செய்யுளிசை அளபெடை)

பெயர் : .....................................................................................

முகவரி : .....................................................................................

.....................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 73
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

...............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media








## விவிலியம் கற்போம் - 71 விடைகள்

பாஸ்கா, மோசே, மக்கள், தீட்டுப்பட்டிருக்கிறோம், கட்டளை, பயணத்தில், கசப்பான, விலக்கப்படுவான், வார்த்தையை, ஆண்டவர்

## அறிவை வளர்ப்போம் - 71 விடைகள்

1) 72 2) ஜோர்ஜ் வாசிங்டன் 3) 18 4) பச்சை
5) கால்பந்தாட்டம் 6) அன்மொழித்தொகை

## *பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ்*

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ரூபா 200/= பரிசு பெறுபவர்**

- இ. டினோஜன்
புதுக்குடியிருப்பு
வாழைச்சேனை

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**


- S. சாதனா
தம்பிலுவில்
- க. அஜித்குமார்
மட்டக்களப்பு

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 23 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
க. ஜொனத்தன்
மட்டக்களப்பு
- **இரண்டாம் பரிசு** - 200/=
கி. தபித்தா
சம்மாந்துறை
- **3ம் பரிசு** - 100/=
கு. டினுஷா
திருகோணமலை

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media